பக்கங்கள்:-பதினாறு

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி

The Valampuri

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 ஆனி 28 சனிக்கிழமை (12.07.2003) தொலைபேசி - 2223378 ஒலி 205




# ஆட்சிமாற்றத்தின் மூலம்

# சமாதானம் ஏற்படாது

## அமைச்சர் ஹக்கீம் உரை

(நமது நிருபர்)

**நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதாக இருந்தால் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் இணைந்து செயற்பட வேண்டும்.ஆட்சியை மாற்றி அமைப்பதன் மூலம் நிரந்தர சமாதானத்தை ஒரு போதும் எட்ட முடியாது. இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**

மட்டக்குழியில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு தற்போது மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு சகல எதிர்க்கட்சிகளும் அரசுக்கு ஆதரவு வழங்க வேண்டும்.எதிர்க் கட்சியினருடைய ஒத்துழைப்புடன் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதையே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா விரும்புகிறார்.

தறபோதைய அரசியல் சூழ்நிலையில் பாராளுமன்ற அதிகாரமும், நிறைவேற்று அதிகாரமும் வெவ்வேறு இடத்தில் இருப்பதனால் அதிகாரப்பரவலாக்கலை மேற்கொள்வது முக்கியவிடயமாகக் கருதப் படுகிறது.

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு அனைவரும் கட்சி பேதமின்றி செயற்பட வேண்டும். சிலர் கூறுவது போல் ஆட்சி மாற்றம் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தாது. இருபது ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வந்த இன

(16ம் பக்கம் பார்க்க)



இன்று தேரேறும் நயினை நாகபூசணி அம்மனின் சிறப்பு மலர் உள்ளே......

## கண்காணிப்புக் குழு தலைவரின் வன்னி விஜயம் ரத்து

(கொழும்பு)

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர்மேஜர் ஜெனரல் ட்றிவிக் ரெலிவ்சனின் நேற்றைய வன்னி விஜயம் பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கபடுகிறது.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ட்றிவிக் ரெலிவ்சன் நேற்று வன்னிக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவிருந்தார்.

இப் பேச்சுவார்த்தையின் போது திருகோணமலை கிண்ணியா குரங்கு பாஞ்சான் குளம் பகுதியில் விடுதலைப் புலிகள் அமைத்துள்ள முகாம் பகுதியை அகற்றுதல் மற்றும் கடற் போக்குவரத்து சமகால அரசியல் செயற்பாடுகள் குறித்து ஆராய்வ துடன் வன்னியின் பல பகுதிகளையும் சென்று பார்வையிடுவதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(வ)

## இடைக்கால சபை வரைபை பாராளுமன்றில் சமர்ப்பிக்குக

## ஜே.வி.பி. வீரவன்ச கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதற்கென தயாரிக்கப்படும் வடக்குக் கிழக்கு இடைக்கால நிர்வாக சபை தொடர்பான அரசின் யோசனைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ நேற்றுப் பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக ஜேவி.பி நேற்று கொண்டு வந்த ஒத்திவைப்புப் பிரேரணையின் போதே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விமல் வீரவன்ச மேலும் தெரிவிக்கையில்;

வடக்குக் கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக அரசின் யோசனைகள் வெறுமனே அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பித்தால் மட்டும் போதாது, அதனைப பாராளுமன்றத்திலும் சமர்ப்பிக்க வேண்டும்.

இடைக்கால நிர்வகாசபை தொடர்பாக நேற்று முன் தினம் ஜே.வி.பி கொண்டுவந்திருந்த ஒத்திவைக்கும் பிரேரணைக்கு அமைசசர்கள் எவரும் பதிலளித்துப் பேசவில்லை என்றும் விமல் வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார்.

இது இவ்வாறிருக்க இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக விமல் வீரவன்சவின் கோரிக்கைக்கு பதில் அளித்த சபை முதல்வரும் அமைச்சருமான லொக்குபண்டார இடைக் கால நிர்வாக சபை தொடர்பான யோசனைகள் பூர்த்தி அடைந்து தீர்மானம் எடுகப்படின் அது தொடர்பாக பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்படும் என்று கூறினார்.

(வ)

## அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா இராஜினாமாவை வாபஸ் பெற்றார்

(கொழும்பு)

விவாசாய சமுர்த்தி விவகார அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா தனது இராஜினாமா அறிவிப்பை வாபஸ் பெற்றுள்ளார்.

சிங்கப்பூரில் இருந்து ஒரு தொகுதி பொருட்களைக் கொள்வனவு செய்தமை தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சையை அடுத்து அமைச்சர் திஸநாயக்கா நேற்றுமுன்தினம் பிற்பகல் திடீரென தனது இராஜினாமா குறித்து அறிவத்ததுடன்உடனடியாகவே இராஜினாமாக் கடிதத்தையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு அனுப்பி வைத்திருந்தார்.

இருப்பினும் இவரது இராஜினாமாக் கடிதத்தை ஏற்காத பிரதமர், அன்றைய தினமே இரவோடிரவாக அமைச்சரை அழைத்து நீண்ட நேரம் பேச்சு நடத்தியதன் பின்னர் அமைச்சர் தனது இராஜினாமாவை வாபஸ் பெற்றதாகத் தெரியவருகிறது.(உ)

## சீநோர் நிறுவன கையேற்பு உரியவாறு அறிவிக்கப்பட வேண்டும்

### சமாசத் தலைவர் தவரெட்ணம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சீநோர் நிறுவனத்தை இந்து கலாசார அமைச்சரிடம் கையளிப்பது தொடர்பாக தமக்கு உத்தியோக பூர்வமாக தெளிவுபடுத்தினாலேயே தாம் அதனை ஏற்றுக் கொள்வது குறித்து தீர்மானிக்க முடியும் என்று வட மாகாண கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரெட்ணம் தெரிவித்துள்ளார்.

சீநோர் நிறுவனத்தை இந்து கலாசார அமைச்சரிடம் ஒப்படைப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தார்.

இவ் அறிவிப்புக் குறித்தே சமாசத் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரி விக்கையில் பாதிக்கப்பட்ட மீன சமூகத்தின் அபிவிருத்தி மற்றும் புனர் வாழ்வையே சீநோர் நிறுவனத்தின் வளர்ச்சியினூடாக நாம் எதிர் பார்க்கிறோம்.

இதனால் அந் நிறுவனத்தை எந்த அமைச்சின் கீழ் கொண்டு வந்தாலும் அவ்விடயம் குறித்து அவ் அமைச்சோ அல்லது அமைச்சு வட்டாரங்களோ எமக்குத்தெளிவு படுத்த வேண்டும்.

அந் நிறுவனத்தை பொறுப்பேற்கும் அமைச்சு மீனவ சமூகத்துடன் கலந்தாலோசித்து அவர்களின் எதிர் பார்ப்புக்கு அமைய செயற்பட்டாலே

(16ம் பக்கம் பார்க்க)

### யுத்த பீரங்கிகளை வாங்க

## பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேலுக்கு விஜயம்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும்,கடற்படைத் தளபதி தயாசந்தகிரியும்,கடற்படைப் பீரங்கிகளைக் கொள்வனவு செய்வதற்காக இஸ்ரேல் சென்றுள்ளனர். புலிகளின் படகுகளில் பூட்டப்பட்டிருக்கும் பீரங்கிகளுக்கு நிகரான வலுவுடைய கனரக ஆயுதங்களை தமக்கும் பெற்றுத் தருமாறு கடற்படை நீண்டகாலமாகவே அரசாங்கத்தைக் கோரி வந்துள்ளது.

இது விடயமாக இலங்கை பாதுகாப்பு அதிகாரிகள் இஸ்ரேலிடமும், அமெரிக்காவிடமும் விசாரித்திருந்தனர். முதலில் இஸ்ரேல் பதிலளிதுள்ளது. இஸ்ரேல் சென்றிருக்கும் இலங்கை

(16ம் பக்கம் பார்க்க)



ஆவரங்காலில் இன்று திறந்து வைக்கப்படவுள்ள சிவசக்தி மணி மண்டபத்தின் எழில் மிகு தோற்றம்.

# ஆவரங்கால் சிவசக்தி மண்டபம்

## திறப்பு விழா-சிறப்பு மலர் 12.07.2003



மண்டபத்தின் எழில்மிகு முகப்புத் தோற்றம்

அறங்காவலர் சிவசுந்தரம் அவர்களின் அன்புத்

தந்தை



ஸ்ரீமான் வல்லிபுரம் வேலுப்பிள்ளை

தாய்



திருமதி தெய்வானை வேலுப்பிள்ளை

சகோதரி



திருமதி காசிப்பிள்ளை தம்பிநாதர்

### நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

ஆவரங்கால் சிவனருளால் வாழும் பெரும் கொடை வள்ளல் ஸ்ரீமான்சிவசுந்தரம் தம்பதிகளின் பணி குறித்து வாழ்த்துகிறோம். தான் பிறந்த மண்ணை மதிக்கும் இவ் மகத்தான அன்பரின் கைங்கரியத்தில உருவான ''சிவசக்தி மணிமண்டபம்'' ஆவரங்கால் திருவூருக்கு மட்டுமல்ல எம்தேசத்துக்கே பயன்தரக் கூடிய பிரமாண்டமான மண்டபம் என்பதை அறிந்து மிகுந்த ஆனந்தம் அடைகிறோம்.இப் புனித கைங்கரியம் நிறைவேற உழைத்த தொண்டர்களுக்கு வாழ்த்துக் கூறுவதோடு காலமுள்ளவரை இத்தர்மச் சொத்தாக சிவசுந்தரம் குடும்பம் வழங்கிய சிவசக்தி மணி மண்டபத்தை புனிதமாகப் பேணவேண்டும் என வேண்டி இறையருளால் என்றும் இம்மண்டபம் மங்களகர மாக விளங்கப் பிரார்த்தித்து நல்லாசி கூறி வணங்குகிறோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரியசுவாமிகள்
(முதல்வர் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்)

### அருட்கவி ச.விநாசித்தம்பியின் வாழ்த்துப்பா

திருவளரும் ஆவரங்கால் சிவனின் வீதி
திகழும்சிவ சக்திமணி மண்டபம் நற்
கருவளரும் தெய்வீகப் பணிகளாற்றிக்
கலைவளரும் செயல்களுடன் தருமசேவைக்
குருவளரும் சமுதாய வளர்ச்சி காட்டி
கொடைவளரும் கற்பகம்போல் சைவமாட்சி
உருவளரும் சிகரமென உலகமெலாம்
ஒளிவிளக்காய் நலம்பெருக்கி வாழி வாழி

அருட்கவி சீ.விநாசித்தம்பி M.A

### பிரதம சிவாச்சாரியாரின் ஆசிச் செய்தி

ஈழவளத் திருநாட்டின் வடபால்மன்னு யாழ்ப்பாண நகரின் மத்தியில் நன்செய் பயிர்களும் புன்செய் பெற்று விளங்கும் ஆவரங்காலில் கெய்வுனைப் பதியில் தம்மை நாடிவரும் பக்தகோடிகளுக்கு அவர் வேண்டும் வரங்களை கொடுத்தருளும் கருனைக் கடல் அருள்பாலிக்கும் நடராஜ இராமலிங்கப் பெருமான் திருக்கோவிலின் குடதிசையில் சிவசக்தி எனும் பெயரினைப் பொருந்தி மணிமண்டபம் அழகுறக் காட்சியளிக்கின்றது. இந்த மணிமண்டபம் கலைகலாசார வைபவங்கள் எல்லாம நடத்தக் கூடிய வகையில் அமைகின்றது இந்த மணிமண்டபத்தினை ஆவரங்கால் சைவ வேளாண்மரபில வாழ்ந்த அமரர் திருவாளர் வேலுப்பிள்ளை தெய்வா னைப்பிள்ளை தம்பதிகளின் புதல்வர்களாகிய திருவாளர்கள் இளையதம்பி,கந்தசுவாமி, சிவசுந்தரம் ஆகியோர் தாய், தந்தையின் ஞாபகார்த்தமாக தங்கள் சொந்த நிலத்தில் சொந்தச் செலவில் ''மகன் தந்தைக்காற்றும உதவி'' என வள்ளுவப் பெருந்தகையின் கூற்றுக்கு அமைய இக்கைங்கரியத்தைச் செய்துள்ளார்கள். இம மணிமண்டபம் சுபானு வருடம் ஆனித் திங்கள் நன்நாளில் திறந்துவைக்க திருவருள் கூடியுள்ளது. ஆகவே இம் மணிமண்டபத்தினை உருவாக்கியமைக்காக எல்லாம் வல்ல பர்வதவர்த்தினி சமேத நடராஜ இராமலிங்க சுவாமியின் பாதாரவிந்தங்களைப் பூசித்து அவன் அருள் பெற்று வண்ண நல்வாழ்வு வாழ அருளாசி கூறி அமைகிறேன்.

பிரதிஷ்டா வித்தகர்
சிவஸ்ரீ வே.நடராஜக்குருக்கள்
(ஆவரங்கால் சிவன் தேவஸ்தானம்)

### ஆன்மீக அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் ஆசியுரை

ஆவாரங்கால் என்றதும் அங்கு அருள்பாலிக்கும் ஆடவல்லான் திருக்கோவிலே எல்லோருக்கும் அகத்திலே தென்படும். அற்புதம் நிறைந்த இராமலிங்கேஸ்வரப் பெருமான் திருவீதியில், அம்மையப்பன் திருப் பெயரில் அழகான சிவசக்தி மண்டபம் அமைக்கப் பெற்றமை அறிந்து மிகுந்த ஆனந்தம் அடைகிறேன். ஆலயச் சூழலில் அரிய பணியை நிறைவேற்றிய பரோபகாரி உயர்திரு வே.சிவசுந்தரம் அவர்களின தொண்டினை மனதார வாழ்த்துகின்றேன். இறைவன் தந்த செல்வத்தை இனிய பணிகளுக்கு பயன்படுத் துபவர்கள் ஒருசிலர். தொண்டினால் கொடையினால் பலரது வாழ்த்தினைப் பெற்று திகழ்பவர் திரு சிவசுந்தரம் என்பதை நான் நன்கு அறிவேன்.

''எந்தையும் தாயும் இருந்து குலாவியதும்
இன்நாடே!
அவர் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடித்ததும் இன்நாடே''.

என்று பாடியவர் பாரதியார். தேசப்பற்று என்பது தன் பரம்பரையை நினைந்துவர வேண்டும் தான் வாழ்ந்த தன் தாய்தந்தை வாழ்ந்த மண்ணை நினைத்து மகத்தான பணிசெய்த சீரிய தொண் டரையும் அவரது குடும்ப உறுப்பினர்களையும் வாழ்த்தி வணங்குகிறேன். எல்லாம்வல்ல ஈஸ்வரி துர்க்கை அம்பாளின் நல்லருள் என்றும் தங்களுக்கு கிடைக்க இறைஞ்சி அமைகிறேன்.

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி JP
(தலைவர் துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை)

### சிவநெறித் தவமகனின் ஆசிச்செய்தி

''தேடிய மாடு வீடு செல்வம்·
தில்லை மன்னுள் ஆடிய பெருமாள் அன்பர்க்கு''

என வாழ்ந்தவர்கள் எம்முன்னோர்கள். இறைவன் தந்தவற்றை தாமும் அனுபவித்து பிறர்க்கும் பயன்பட உதவுதல் மகத்தான பண்பு.அன்பர்-திரு.வே.சிவசுந்தரம் அவர்கள் மேற்குறித்த இலக்கணத்துக்குரியவராக விளங்குபவர்.1999ல் முதல் முதலாக யான் இலண்டன் சென்ற போது இப் பெருந்தகையைச் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றேன்.அன்று முதல் அவர் பல தர்மகாரியங்களை என் மூலம் செய்வித்தார்.எங்கள் புண்ணிய பூமியாகிய சிவ பூமியில் நல்ல பணிகள் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் அவரிடம் எந்நாளும் காணப்படும சிறப்பு அம்சமாகும்.அவ்வகையில் தான் பிறந்த ஆவரங்கால் பூமியில் சைவ மக்களின் பயன்பாட் டுக்குரிய பிரமாண்டமான மணி மண்டபத்தை தன் தாய் தந்தைக்கு அர்ப்பணமாக உருவாக் கியிருப்பது மெச்சத்தக்கது.

இப்பெரிய தொண்டினை நிறைவேற்ற அன்பர் சிவசுந்தரம் அவர்கள் என்னை நாடியது இறைவன் திருவருள்.எனது அகத்தில் தோன்றிய சிந்தனைகளை எல்லாம் இம் மண்டபத்தில் நிறைவேற்ற மறு வார்த்தையின்றி உடன்பட்ட சிவசுந்தரம் அவர்களின் சீரிய பண்பினை நினைந்து மகிழ்கிறேன்.எதிர்கால சந்ததிக்கு முன் உதாரணமாக திரு. சிவசுந்தரமும் அவரது பாரியார் அருளேஸ்வரி சிவசுந்தரமும் அவர்களது அருமைப் புதல்வர்களும் இன்று இக்கைங்கரியத்தை நிறைவேற்றியிருக் கிறார் கள்.இப் பணிக்கு ஒத்துழைத்த ஆவரங்கால மக்களுக்கும்,கட்டட நிர்மாணப் பணியை நிறைவேற்றிய கலைஞர் திரு.ச.ஆறுமுகநாதன் அவர்களுக்கும் நன்றியைக் கூறி சூரிய சந்திரர் உள்ளவரை சிவசக்தி மண்டபம் சுடர் விட்டுப் பிரகாசித்து சிறக்க வேண்டும் என்று இறைவனை இறைஞ்சுகின்றேன்.

செஞ்சொற் செல்வர்
திரு·ஆறு·திருமுருகன்.

## ஆவரங்கால் V&T அறக் கட்டளையின் அறங்காவலர் திருவாளர் வேலுப்பிள்ளை சிவசுந்தரம் அவர்களின்

# சமர்ப்பணம்



சிவசுந்தரம் அருளேஸ்வரி தம்பதிகள்

எல்லாம் வல்ல ஆவரங்கால் ஸ்ரீ பார்வதவர்த்தனி சமேத நடராஜ இராமலிங்கேஸ்வரர் திருவருளை முன்னிட்டு வாழும் எம் குடும்பத்தவர்களின் அர்ப்பணமாக சிவ சக்தி மண்டபத்தை உருவாக்கியுள்ளோம் உழுது பயிர் செய்து உபவாசம் இருந்து வணங்கி எம்மை வளர்த்து ஆளாக்கிய எந்தையும், தாயும் இருந்து குலாவிய எம் திருவூரில் பலருக்குப் பயன் தரக்குகூடிய பணியினை பரமன் எமக்குப் பணித்தான்.வீழ்ந்து தவழ்ந்து விளையாடி ஆடிப்பாடி மகிழ்ந்த எம் ஆவரங்கால் பூமியில் அரும் பணி செய்ய அம்மாள் [illegible] கடாட்சத்தை நினைத்து அகமகிழ்ந்து வணங்கு [illegible]றோம்.கடல் கடந்து வாழ்ந்த போதிலும் எம் அகக் [illegible]ணில் ஆவரங்கால் திருவூர் என்றும் நிதர்சனமாகத் [illegible]படும். எங்கள் குல தெய்வத்தின் திருவருளே எமது வாழ்வு.கல்விதந்த கலைக் கூடமான ஆவரங்கால் இராமலிங்க வித்தியாலயமும்,புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியும் என்றும் எம் நன்றிக்குரிய அறிவா லயங்கள் எம்மை வாழ்த்தி வளர்த்த உற்றார் உறவினர் ஊரவர் தந்த அன்புக்கு என்றும் யாம் நன்றிக் கடன பட்டவர்கள்.இன்று யாம் வாழும் இங்கிலாந்து தேசத்திலும் இறை அருளும் இனிய மனிதர்களின் நட்பும் எம்மை நன்றே வாழ்விக்கிறது.

நல்லார் பலரின் நல்லாசியால் நன்மைகள் பல பெற்ற யாம் இப் புனித கைங்கரியத்தை நிறைவு செய்ய வழிகோலியது.இத் திருப்பணி நிறைவேற உழைத்தவர்கள் பலர் நாம் என்றும் பெருமதிப்போடு எம்வழிகாட்டியாகக் கருதும் செஞ்சொற்செல்வர் திரு.ஆறு. திருமுருகன் அவர்க ளிடம் எமது ஊரில் நிரந்தரமான திருப்பணி ஒன்றை நிறைவேற்ற வேண்டும் என வேண்டினேன்.அவர் என்னை மிகுந்த உற்சாகம் ஊட்டி ஒரு வருட காலத்திற்குள் இப் பெரிய கைங்கரியம் நிறைவேற உழைத்தார். எங்கள் மணி மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டியது முதல் இன்று வரை இப் பணி நிறைவேற அவர் ஆற்றிய பல தொண்டுக்கு யாம் என்றும் நன்றிக் கடன் பட்டவர்கள். எங்கள் கிராமத்து அன்பர்கள் உறவினர்கள் இப் பணி நிறைவேற பூரண ஒத்துழைப்பு வழங்கினார்கள்.எமது மண்டப நிர்மாணப் பணியினை பொறுப்பேற்ற கட்டட ஒப்பந்தக்காரர் தெல்லிப்பழை திரு.ச.ஆறுமுகநாதன் அவர்களுக்கு எமது நன்றிகள் உரித் தாகுக.எமது மண்டப நிர்மாணத்திற்கு ஆலோசனை வழங்கிய பொறியியலாளர் உயர் திரு.சி.தயாபரன் அவர்களுக் கும்,மண்டப நிர்மாணப் பணியில் பங்கு பற்றிய ஏனைய கலைஞர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள் உரித் தாகுக.

எமது V&T அறக்கட்டளையின் ''சிவ சக்தி மணி மண்டபம்'' ஆன்மீக விழாக்கள்,மண விழாக்கள்,காலாசார நிகழ்ச்சிகள்,அறிவியல் வைபவங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு காலம் காலமாக புனிதமாகப் பேணப்பட எல்லோரும் துணை செய்ய வேண்டும் என வேண்டி இறைவனைப் பிரார்த்தித்து நிறைவு செய்கிறேன்.

**உழுது,பயிர் செய்து உபவாசம் இருந்து வணங்கி எம்மை வளர்த்து ஆளாக்கிய எந்தைக்கும் தாய்க்கும் இத் திருப்பணி சமர்ப்பணம்.**

திரு.வே.சிவசுந்தரம்
ஸ்தாப்கர், சிவ சக்தி மண்டபம்,



# நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ரதோற்சவ சிறப்பு மலர்




இன்று பக்தர் நலம் காக்க தேரேறி உலா வருகின்ற
நயினை நாகபூசணியின் அருள் நாடி நிற்கிறோம்.

**நாகராணி படடுச் சேலை**

உரிமையாளர்:ச.தருமராசா

6ஆம் வட்டாரம், [C/6188] நயினாதீவு



இன்று வீதி உலா வரும் நாயகியின்
அருள் வேண்டி நிற்கிறோம்



**சிறிமாரி நகைமாடம்**

நாளுக்கு நாள் மாறும் அதிநவீன
தங்க நகைகளுக்கு

49(187) கே.கே.எஸ்.வீதி, [C/6191] யாழ்ப்பாணம்



எமது அன்பர்கள்,
வாடிக்கையாளர்கள், நண்பர்கள்
யாவருக்கும் நயினை நாகபூஷணி
அம்மன் அருள் பாலிக்கட்டும்

**க.வாகீசன் பலசரக்கு வியாபாரம்**

உரிமையாளர்: வி.கே.கணநாதன்

1ஆம் வட்டாரம், [C/6195] நயினாதீவு



அல்லல் தீர்த்து அருளை அள்ளி வழங்கும் நயினை
நாகபூசணியின் அருள் நாடி நிற்கிறோம்

**ஸ்ரீ அம்பாள் சைவ உணவகம்**

உரிமையாளர்:செ.அம்பிகைதாசன்

7ஆம் வட்டாரம், [C/6187] நயினாதீவு



இன்று தேர் ஏறி உலா வரும் நயினாதீவு
ஸ்ரீ நாகபூசணியின் அருள் வேண்டிப்
பிரார்த்திக்கின்றோம்.

**மாணிக்கவாசகர் ரேட் சென்ரர்**

(பல்பொருள் வாணிபம)

6ஆம் வட்டாரம், [C/6189] நயினாதீவு.



பார் போற்றும் மணிபல்லவத்தின்
நாயகிக்கு இன்று தேர் உலா !
அவள் பாதம் நாடினோர்க்கு இன்று
அருள் விழா!!

**ஸ்ரீ லக்சிகா ஸ்ரோர்ஸ்**

பலசரக்கு மாளிகை

உரிமையாளர்:செ.அம்பிகைதாசன்

7ஆம் வட்டாரம் [C/6190] நயினாதீவு


## மனநிறையுமின்பைத் தருவாயே!

தருணமதில் வந்து கருணைமிக உந்து
அருளினையு கந்து – தருதாயே
தவமறைபு கழ்ந்து உரைசிவன்வி ரும்பு
இடமதையு வந்து அமர்தேவி
பெரு அரவம் நின்று திருவருளை நன்கு
பிரியமுடன் நல்கு – பெருவாழ்வே
பெருகுவினை தந்த துயரமதில் நொந்த
புலையனிவ னென்று – தள்ளாதே
மருவி மிக அன்பு பெருகியழ நின்று
மன நிறையு மின்பைத் – தாராயோ?
மகிழுதமிழ் கொண்டு நெகிழ்கவிபு னைந்து
மனமுருகி நின்று – பணியேனோ?
திரு அருளும் அன்னை யென உலகு நின்று
திசைபலபு கழ்ந்த – பெருமாட்டி
திகழுகம லங்கள் நிறைகுணமிலங்கு
திருநயினை வந்த – அம்பாளே.

*இராசையா குகதாசன்,*
*நாயன்மார்கட்டு.*

## தித்திக்கும் தேரோட்டம்

தெய்வத் திரு மகளின்
தித்திக்கும் தே ரோட்டம்
பெய்யும் கருணை யினால்
பேரின்பம் கிட்டு மம்மா!

நாளும் உனைக் கூப்ப
நாடே செழித் தோங்கும்
பாழும் பகைமை களோ
பாரில் பதைத் (ஏ)தேங்கும்!

பக்தி மணம் கமழும்
பாங்கான நயினை யிலே
சக்தி உனை வழுத்தச்
சங்கடங்கள் தீரு மம்மா!

உய்ய வழி தெருட்டும்
உத்தமியே மீ னாட்சி
கைமேல் பலன் தந்து
காத்திடம்மா கா மாட்சி!

*வி.சி.குஞ்சிதபாதம்,*
*கூத்தாடி.*

## அருள் வதனம் காட்டிடுவாய்

இந்து சமுத்திரத்தில் இலங்கிடும் முத்தே
ஆதியும் அந்தமும் இல்லா அம்பிகையே
நயினைப் பதியுறையும் நாகபூசணியே
அலைவந்து உன் பாதம் கழுவும் தாயே
உன் அழகைக் கண்டு உவக்கின்ற வேளையில்
எங்கள் குறை தீர்த்திடுவாய் அம்பிகையே!

*க.மனோட்ஷவாணி,*
*வேலணை.*

## அருள்வாய் நாக பூசணியே!

தேரேறித் திருக்காட்சி தரும் நாக பூசணியே!
நீரோடும் விழியோடுன் அருள் நாடி வந்தோமே!
தீராத வினையெல்லாம் தீர்த்திந்த மண் மீதில்
சீரோடுஞ் சிறப்போடும் வாழ வழி செய்யம்மா!

ப.மகேந்திரதாசன்.



உ
சரவணபவாய நம

# நீர்வேலி அருள்மிகு செல்லக்கதிர்காம சுவாமி கோவில்

# இரதோற்சவ சிறப்பிதழ்









## அருளொளி வீசும் அற்புத ஆலயம்

செல்லாச்சி அம்மைக்கு வேல்கொடுத்தருளி
செல்லக் கதிர்காமனென பேர்கொண்டு இலங்கி
வல்வினை போக்கி நல்வரம் அருளும்
வேல்கொண்ட வேந்தனே தேரேறி வருகவே

சகல வளமும் தன்னகத்தே கொண்டு நீர்வையம்பதியில் தனிச்சிறப்புடைய தலமாய் இன்று திகழ்வது செல்லக் கதிர்காம ஆலயமாகும். இத்திருத்தலத்தினது திரு வரலாறாவது செல்லாச்சியம்மை என்ற முருகன் அடியாருக்கு ஒரு சோதனையை முருகக் கடவுள் ஏற்படுத்தி ஒரு நொடிப்பொழுதில் ஈழத்தின் தென்பகுதியில் உள்ள கதிர்காமத்துக்கு அழைத்துச் சென்று ஞான வேல் ஒன்றைக் கொடுத்து மறுநொடியில் நீர்வையம்பதியில் விட்டு "என்னை வழிபடுக" என்றருளி மறைய இத்திருத்தலத்தே அன்று தொட்டு அடியார்கள் கூடி "கதிர்காம சுவாமி" எனப் பெயரிட்டு வழிபட்டனர்.

1936 ஆம் ஆண்டு ஆகம விதிப்படி ஆலயம் அமைத்து வழிபாடாற்ற தொடங்கிய போது ஆரம்பத்தில் அந்தண குலப் பெருமகன் சிவஸ்ரீ தியாகராஜக் குருக்களும் பின் நீலகண்டக் குருக்களும் பூஜகர்களாகத் தொண்டாற்றினர். ஆயினும், சிறிது காலத்தே ஆலயம் கவனிப்பாரற்றது. ஆயினும், பின் சிவஸ்ரீ தியாகராஜக் குருக்கள் (மணிஐயா) பூசகராக ஊர்ப் பெரியவர்கள் ஒத்துழைப்போடு பெரும் தலமாக வளர்ச்சியுற்று கொடியேறி மஹோற்சவம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று.வருகிறது. இத்தலத்தில் திருநீறு, தீர்த்தம் ஆகியன நோய் நொடி தீர்க்கும் அற்புதப் பிரசாதங்களாய் உள்ளது. அத்துடன் இன்று ஆன்மீக நூலகம் ஆகியனவும் கொண்டு இளம் பேச்சாளர்களை ஊக்குவிக்கும் தலமாயும் நூல்கள் வெளியிடும் மைய நிலையமாகவும் காணப்படுகிறது. இத்தல தலவிருட்சமாக நெல்லியும் கடம்பும் இருத்தல் மிகச் சிறப்பான அம்சமாக உள்ளது.

மேலும், சுக்கிர வாரம், கார்த்திகை நட்சத்திரம், கந்தசஷ்டி ஆகியனவும் ஆனி மாதத்தில் பன்னிரு நாட்கள் மஹோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். உண்மையில் முருகனுடைய கிருபை ஒன்றே கலியுக துன்பங்களையும் தீர்க்கவல்லதாகும்.

## ஆசியுரை



இரதோற்சவம் மற்றைய உற்சவங்களை விட மிகச் சிறப்பானதாய் திகழ்கிறது. பொதுவாகவே மஹோற்சவம் மக்கள் மனதில் பக்தியை ஏற்படுத்துவதாகவும், மற்றைய நாட்களில் தேவஸ்தானத்தில் ஏற்படும் குறைகளைக் களைவதாகவும் உள்ளது. இவ்விதத்தில் நீர்வையூரிலுறை செல்லக் கதிர்காமக் கந்தனுக்கு இரதோற்சவம் நடைபெறு கின்றது. இம்முறை இவ்வாலயத்தில் மஹோற்சவத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அறிஞர் சொற்பொழிவாற்றினர். இவ்வாறு மிகச் சிறப்பாக நடைபெற்ற மஹோற்சவத்தில் இன்று "இரதோற்சவம்" நடைபெறுகின்றது.

"தந்தஸ்ய கீர்த்திம் அதுலாம் கலி கல்மஷ நாசினீம்" என்று வடமொழி சுலோகம்சொல்லும். அதாவது கலியுக துன்பங்களையெல்லாம் கந்தனை வழிபடுவதால் நீங்கும் என்கிறது.

சித்துக்களில் வல்ல சித்தர்களாகிய இரு தபஸ்வினிகள் உண்டாக்கியது நீர்வை செல்லக்கதிர்காமத் தலமாகும். ஆகவே, இன்றும் முருகன் இங்கு தினமும் திருவிளையாடல் செய்து வருகின்றான். இவ்விதத்தில் பஞ்ச கிருத்தியங்களுள் ஒன்றான மும்மலமழித்தலை இன்று குமரன் செய்யும் வேளையில் அவனடி பணிந்து ஆணவாதி மலங்கள் நீங்கிய புனிதர்களாவோமாக.

அல்லல் அறுத்திடுவான் ஆறுமுகன் குகன்
நல்லவளம் கொழிக்கும் நீர்வைக் கந்தனவன்
எல்லோர்க்கும் வாழ்வளிக்க இதயத்திருந்திடுவான்
செல்லக்கதிர்காமமென சிறப்புற கோயில்கொண்டோன்.

சிவஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள்
(துவஜாரோகண குரு)

## சொர்க்கத்தில் இடம்பிடிப்போமே

*கடம்ப மலர் மாலை சூடிடும் கந்தனவன் என்றென்றும்*
*திடமாய் உறை நீர்வை செல்லக்கதிர்காம திருத்தலத்தே*
*நடம்பயில் மயிலேறி விளையாடு குமரேசனுடைய தேர்*
*வடம்பிடிப்போமே சொர்க்கத்தில் இடம்பிடிப்போமே*

தி.மயூரகிரி,
நீர்வேலி.

## துய்யதோர் மறைகளாலும் துதித்திடற்கரிய செவ்வேள்

சொற்பதங் கடந்த அற்புதக் கந்தனாய் நீர்வைப் பதியிலே கோயில் கொண்டு அருள்புரியும் செல்லக்கதிர்காம சுவாமி இன்று தேரேறி வருகிறார்.

உலகமுய்ய உதித்த எங்கள் பெருமான் சரவணப் பூம் பொய்கையில் அறுமுக உருவாய்த் தோன்றி அருளொளி காட்டியவன். பிரணவம் உரைத்தோனுக்குப் பிரணவ வடிவமான மயிலே வாகனமாக அமைந்துள்ளது. மயிலேறுதல் என்பது ஓம் என்னும் நாதத்தில் அடங்கியிருத்தல் எனப் பொருள்படுகிறது.

பிறப்பு, இறப்பு இல்லாத எங்கள் பெருமானின் அருள்பெற்ற அடியார்கள் பலர் உளர். தன்னை எதிர்த்தவர்களையும் நல்வழிப் படுத்துகின்ற இளம்பூரணன் - முருகப்பெருமான் என்பது புராணங்களில் இருந்து கிடைக்கும் சான்று மாத்திரம் அன்று அனுபவ உண்மையுமாகும்.

நீர்வைப் பதியிலே குறுகிய காலத்துள் பக்தர்கள் மனதை வென்ற ஆலயமாக மிளிர்வது செல்லக்கதிர்காம சுவாமி ஆலயமாகும். இன்று சைவ உலகிற்காக பல தொண்டுசார் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றமை பெருமையுடன் சுட்டிக்காட்டப்பட வேண்டியவை. ஆன்மீக நூலக சேவை முருகனுக்குரிய சிறப்பான தினங்களில் அன்னமிடும் பணி, இறைபணியில் இளையவர்களை ஊக்குவிக்கும் பண்பு போன்றவை குறிப்பிட்டுக் காட்டப்படவேண்டியவை.

எம்பெருமானின் திருவருளாலும், நீர்வைமணிஐயாவின் குருவருளாலும் ஆலயம் பொலிவுபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்று தேரேறி வலம்வரும் எங்கள் பெருமான், எங்களிடம் இருக்கின்ற அசுர குணங்களை அழித்து - அருள்பாலிப்பாராக எனவும், இந்த மண்ணில் அன்பும், அமைதியும் சுடர்விட்டுப் பிரகாசிக்க அருள்புரிவாராக எனவும் எல்லோரும் சேர்ந்து வழுத்துவோம்.

"துய்யதோர் மறைகளாலும் துதித்திடக் கரிய செவ்வேள்
செய்யபேரடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பு கீண்ட வேற்படை வாழ்க அன்னான்
பொய்யில் சீர் அடியார் வாழ்க வாழ்க இப்புவனமெல்லாம்."

"சிவத்தமிழ்ச் சொல்லழகர்"
ச.லலீசன்
ஆசிரியர்
(ஸ்ரீ சோமாஸ் கந்தக் கல்லூரி, புத்தூர்)


நீர்வையூர் செல்லக் கதிர்காமன்
திருவருளுக்காகப் பிரார்த்திக்கின்றோம்

**வினோ நகைப் பூங்கா**

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

"குருவாய் வருவாய் அருள்வாய் குகனே"
இரதோற்சவம் சிறக்க வழுத்துகிறோம்

**பவானி களஞ்சியம்**

இராச வீதி,
நீர்வேலி.

# நயினை நாகபூஷணி அம்மன் இரதோற்சவ சிறப்பு மலர்


அவனி எங்கும் அமைதி காத்திட தேரில்
பவனி வரும் நயினை அன்னையே உன்
அருள் வேண்டி நிற்கின்றோம்

**தாரணி படகுச் சேவை**

உரிமையாளர் : க.சவுந்தரநாயகம்.
1ம் வட்டாரம், நயினாதீவு

(C/6178)

நயினை நாகபு,ஷணியின் அருள்
அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

மரத் தளபாடங்கள், யன்னல் நிலைகள், கதவுகள்,
சப்புப் பலகைகள், தீராந்திகள் , கல் மணல்
என்பனவற்றை தரமான முறையில் செய்து
பெற்றுக்கொள்ள

**ஈஸ்வரி மரக்காலை அன் தொழிலகம்**

பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி.

(C/6177)

நயினை நாகபு,ஷணியின்
அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்

வெட்டுதல் போன்ற சேவைகளுக்கு நாடுங்கள்

**லிங்கம் உலோகத் தொழிலகம்**

264, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/6179)





நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி

**அமுதசுரபி அன்னதான சபையின் வாழ்த்துக்கள்**

அலைகடல் நடுவிருந்து அன்னம் பாலித்து அடியவர்களின் இன்னல் தீர்த்துக் கொண்டிருக்கும் எம் தாய் நயினை நாகேஸ்வரியின் இன்றைய தேர்த் திருவிழாவிலே சகல அடியார்கட்கும் எல்லா நலன்களும் கிடைக்கவேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 44 ஆண்டுகளாக மஹோற்சவ காலங்களிலும், ஆடிப்பூரம், தைப்பூசம் போன்ற விசேட தினங்களிலும் அன்னதானம் அளித்து அடியார்களின் அல்லல் தீர்க்கும் நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அமுதசுரபி அன்னதான சபையின் சேவை மென்மேலும் தொடர அம்பிகையின் அருளையும், அடியார்களின் மேலான உதவியையும் வேண்டிக்கொள்கிறோம்.



தலைவர்
நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி
அமுதசுரபி அன்னதான சபை

(C/6176)

# சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் ஆலய

# தேர்த் திருவிழா சிறப்பு மலர் -12 -07 -2003


சகலவிதமான பலசரக்குப் பொருட்களையும் நிதான விலையில் பெற்றுக்கொள்ள

**விநாயகர் ஸ்ரோர்ஸ்**

கல்வளை. சண்டிலிப்பாய்.

**விக்கினேஸ்வரா நகைத் தொழிலகம்**

அசல் 22கரட் தங்கத்தில் நவீன முறையில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அருகாமை, சண்டிலிப்பாய்.

**தர்மா மற்றல் அக்கடமி**

தரம் 5முதல் A/L வரை கற்பிக்கப்படுகிறது

கடமை கண்ணியம் கட்டுப்பாடு நிறைந்த கல்வி நிறுவனம்.

சண்டிலிப்பாய். கிளை - சங்கானை

**கே.எஸ். தொலைத் தொடர்பு சேவை**

உள்நாடு - 222 5553
071-2303687

வெளிநாடு - 0094-21222 5553
0094-71-2303687

இரட்டையர் புலம், சண்டிலிப்பாய் வடக்கு.

**சோமன்ஸ் தொலைத் தொடர்பு சேவை**

உள்நாடு - 021 222 3185
070-213000

வெளிநாடு - 0094-21 222 3185
0094-70-213000

கல்வளை வீதி, சண்டிலிப்பாய்.

**மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்**

பிரதேச செயலகம் முன்பாக, சண்டிலிப்பாய்.


மலர் அமைப்பு
**எஸ்.கவிதரன்**



## மகோற்சவ குருவின் ஆசிச்செய்தி

கல்வளையானுக்கு இன்று தேர். காம-குரோத-மத-மாற்சரியங்களை வேரோடு சாய்க்க தேரேறி வருகின்றான் கல்வளை விநாயகன்.

இந்துக்களின் கலை மரபில் 'தேர்' தனித்துவமானது. வேதங்களிலே 'ரதம்' பற்றிய செய்திகள் உண்டு.

**''தக்ஷ்ப்யோ ரத காரேப்யசவோ நம:**
**ரதேப்யோ ரதபதிப்யச் சவோ நம:**

இதன் அர்த்தம் வருமாறு; ''பெருமரங்களை வெட்டி சிறு துண்டுகளாக்கி சாஸ்திர விதிகளின்படி தேரை நிர்மாணிப்பவன் சிற்பாசாரி; அந்தத் தேருக்கு அதிபதியே, உனக்கு வணக்கம்'' என்கிறது யசுர்வேதம்.

தேர் பிரபஞ்சத்தின் குறியீடு. கடிவாளமிட்ட குதிரைகள சரியான பாதையில் தேரைக் கொண்டுசெல்வது போல, ஐமபுலன்களுக்கும் கடிவாளமிட்டு சன்மார்க்கத்தில் மனதைச செலுத்த வேண்டும்.

ஊரெல்லாம் கூடி இழுப்பது தேர். தேர்த்திருவிழா சமூகத்திருவிழா. அது சமாதான சகோதரத்துவத் திருவிழா. ஊராரின் ஒத்துழைப்பை நாடிநிற்கும் திருவிழா.

சமாதானத்திற்கான இந்த அமைதிக்காலத்தில், எம்பெருமானின் தேர்த்திருவிழாவில் அனைவரும் பங்குகொண்டு சமூக ஒறறுமையின் சின்னமான தேரைக் கண்டுகளித்து சமாதான சகவாழ்வு வாழ ஆசீர்வதிக்கின்றேன்.

சுபமஸ்து

சிவப்பிரம்மஸ்ரீ சிவ.நித்தியானந்த சிவாச்சாரியார்,
யாழ்.மாவட்ட அமைப்பாளர்,
சர்வதேச இந்துமத குருபீடம்,
சங்கானை.

## தர்மகர்த்தா தலைவரின் வாழ்த்துச்செய்தி

சமயாசாரங்களும் கலைபண்பாட்டு விழுமியங்களும் தலைசிறந்து விளங்கும் சண்டிலிப்பாய் கல்வளைப்பதியிலே கோயில் கொண்டுள்ள விநாயகப் பெருமான் ஆலயம் ஓர் வரலாற்றுச் சிறப்புமிக்க புண்ணிய திருத்தலமாகும். மாருதப்புரவீக வல்லியினால் யாழ் மண்ணில் ஏழு விநாயகர் ஆலயங்கள் அமைக்கப்பட்டன. அதில் கல்வளை விநாயகர் ஆலயமும் ஒன்றாகும். அன்று தொடக்கம் இன்றுவரை தேடிவரும் அடியவர்களை அரவணைத்து அருள்பாலிக்கும் விநாயகருக்கு மாபெரும் புனருத்தாரண வேலைகள் 1988ஆம் ஆண்டு ஆரம்பமாகி 1995ஆம் ஆண்டு பெரியளவிலான குடமுழுக்கு சிறப்பாக நடைபெற்றது. எம்பெருமான் இக்கிராம மக்களுக்கு அருளாசிகளைக் குறைவிலாது அள்ளி வழங்குகிறான் என்பதற்கு சான்றாக முன்னேறிப்பாய்ச்சல் இராணுவ நடவடிக்கையில் எத்தனையோ எறிகணைகள், விமானக் குண்டுவீச்சுக்கள் எம் கிராமத்தைப் பதம்பார்த்தன. ஆனால் மக்களுக்கோ, அவர்களின் உடைமைகளுக்கோ எந்தவித சேதங்களையும் உண்டுபண்ணாது அவர்களைக் காத்து நின்று அருளாசி வழங்கிய எம்பெருமான், சின்னத்தம்பிப் புலவரால் கலவளை அந்தாதி பாடப்பட்ட பெருமைக்குரியதுமான சிறப்புக்குரிய விநாயகப் பெருமான் இன்று ரதம் ஏறும் இந்நன்நாளாகிய இத்திருநாளில் சாந்தியும் சமாதானமும் சுபீட்சமும் நிறைந்து எல்லோரும் இன்பமாய் வாழ விநாயகப் பெருமானின் திருவடிகளை வணங்கி எனது வாழ்த்துச் செய்தியை நிறைவுசெய்கிறேன்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!

என்றும் கல்வளையான் திருத்தொண்டில்
செ.நித்தியானந்தம்,
தலைவர், கல்வளைப்பிள்ளையார் கோவில்
தர்மகர்த்தா சபை.

## சைவப்புலவரின் ஆசிச்செய்தி

இறைநம்பிக்கை என்றும் மனித வாழ்வுக்கு அவசியமாகும். தும்பிக்கையானை நம்பிக்கையோடு நாளும் வழிபாடு செய்பவர்கள் கல்வளை அடியார்கள். இன்று பல ஆலயங்களில் மகோற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது. கல்வளை அடியவர்கள் மட்டுமன்றி சண்டிலிப்பாய் பெரும்பகுதியே ஒன்றாகக் கூடி வழிபடும் பிள்ளையாரின் தேர்த்திருவிழாவில் கலந்துகொண்ட அடியார்கள் எல்லோருக்கும் பிள்ளையாரின் திருவருள் பூரணமாகக் கிடைத்து எல்லோரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வாங்கு வாழப் பிரார்த்திக்கிறேன். இம்மலர் சிறப்பாக வெளிவர ஒத்துழைத்த அனைவருக்கும் சகல செல்வங்களையும் பிள்ளையார் வழங்குவாராக.

சைவப்புலவர் செ.கந்த சத்தியதாசன்,
ஆசிரியர், யா/இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்.


சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையாரின் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்

**முருகா கடைச்சல் தொழிலகம்**

8B ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**ஐங்கரன் வெல்டிங் வேக்ஸ்**

சகலவிதமான ஓட்டு வேலைகளுக்கும் நாட வேண்டிய இடம்

தொட்டிலடி, சண்டிலிப்பாய்.

**ஐடியல் அக்கடமி**

தரம் 3 முதல் A/L வரை கற்பிக்கப்படுகிறது

ஒழுங்கும் கட்டுப்பாடும் நிறைந்த நிறுவனம்.

சண்டிலிப்பாய். கிளை - காரைநகர்.

**R.S தொலைத் தொடர்பு சேவை**

போட்டோ பிரதி, கொம்பியூட்டர் பிறிண்டிங், பக்ஸ், இன்ரநெற் ஈமெயில், றோணியோ

Local - 021 -222 5413
I.D.D - 0094 -021 222 5413

சிரணிச்சந்தி, சண்டிலிப்பாய்.

**ரூபி போட்டோ அன் வீடியோ**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**சென்ரல் மோட்டோர்ஸ்**

374A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

T.P- 222 2291

# யாழ்ப்பாணம் - வண்ணார் பண்ணை அருள் மிகு ஸ்ரீ வீரகாளி அம்மன் ஆலய இரதோற்சவ சிறப்பு மலர்

## 12.07.2003





### வண்ணை ஸ்ரீ வீரகாளியம்பாள் திருவூஞ்சல்

கனற்சடையின் விரிகுழலும் அசைந்தே ஆடக்
கரியவணத் திருமேனி இசைந்தே ஆடச்
சின்னத்தசுர மகிஷதலைக் கரமும் மாடச்
செங்கண்ணில் வீரரஸம் ததும்பி ஆட
மனத்தகத்தே கருணைமிகும் அருளுமாட
மலர்க்கரத்தில் சூலமெடு கபாலமாட
வனமலர்சூழ் யாழ்ப்பாண நல்லூர் மேவும்
வீரமாகாளியம்மா ஆடீர் ஊஞ்சல்.

செழுந்தமிழ் மன்னராட்சி புரியுநாளில்
சீர்நல்லை இராஜதானியாக கொண்டு
எழுந்திடு வெயிலுகந்த கணபதிக்கும்
எழில் வீரமாகாளி கோயில் கட்டி
பழந்தமிழ் சைவகுரு பரம் பரைக்கு
வழங்கினான் ஆட்சிமுறை பு,ஜை நெறி
விளக்கிடு யாழ்ப்பாண நல்லூர் மேவும்
வீரமாகாளியம்மா ஆடீர் ஊஞ்சல்.

திங்கள் தோறும் சைவக்குரு பரம்பரையோர்
தினம்பக்தியோடும் செவ்வாய் பு,க்கப் பு,ஜை
மங்களஞ் சேர் அன்புதன்னால் மந்திரங்கள்
மந்திரிக்க வியாழன் தனைப் புனையும் காளீ'
சிங்க வெள்ளி வாகனத்தில் ஆசனித்தே
செகக்கோடி ஞாயிறு போல் காட்சி தந்தாய்!
வங்கமொலி யாழ்ப்பாண நல்லூர் மேவும்
வீரமாகாளிளயம்மா ஆடீர் ஊஞ்சல்.

கல்வி வேண்டிக் காளிதாஸன் கதறியழக்
கவிதை மழை பொழிய வைத்தாய் காளித் தாயே!
அல்லிருட்டில் அபிராமிப்பட்டர் வேண்ட
அம்புலியைக் காட்டினையே காளியம்மா!
நல்லையிலே சைவகுரு பரம்பரையோர்
நாளும் உன் பாதப் பூஜை செய்ய வைத்தாய்!
வல்லவளே யாழ்ப்பாண நல்லூர் மேவும்
வீரமாகாளியம்மா ஆடீர் ஊஞ்சல்.

ஆதிசைவக் குருமார்குல அரசீ எச்சரிக்கை
அணிமாடவூர் அழகார் நல்லை அமர் வோய் எச்சரிக்கை
ஆதிமற மாரிபக்த காளீ எச்சரிக்கை
அருமாதவர் தொழுந்தேத்திடும் பரையே எச்சரிக்கை.

அமைப்பு:- கு.கிரிதரன்

### நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

யாழ்ப்பாணம் வண்ணையில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் வீரமாகாளி அம்பாளுக்கு இன்று இரதோறசவம் நடைபெறுவதை இட்டு பெருமகிழ்ச்சி அடைகிறோம். பழமையும் பெருமையும் வாய்ந்த இவ்வாலயம் நல்லூரையாண்ட சைவத் தமிழ் மன்னனான சங்கிலியனால் வழிபடப் பெற்ற பெருமைக் குரியது. நல்லூருக்கும் சிறப்புக்கள். அவற்றுள் பல ஆலயங்கள் அமைந்து மக்களின் ஆன்மீக ஈடேற்றத்துக்கு வழி சமைக்கும் நிலையில் உள்ளது. வீரமாகாளியாக எழுந்தருளியிருந்து வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் இறைவியின் அருள் அனைவருக்கும் கிடைக்க இறையாசி வேண்டுகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
ஆதீனமுதல்வர்.
நல்லை ஆதீனம்
நல்லூர்.

### பிரதமகுருவின் அருளாசிச் செய்தி

அண்டங்கள் யாவற்றையும் காத்தருளி அகிலாண்டடேஸ்வரி நாமம் பெற்ற ஆத்தாள் வண்ணைப் பெரு நகரில் வீரமாகாளி அம்மனாக வீற்றிருந்து தன்னை நாடிவரும் அடியார் குறைதீர்த்து அருளாட்சி புரிகின்றார். தமிழ் மன்னர்களால் வழிபடப் பெற்ற சிறப்பு மட்டுமன்றி போர்க்களம் செல்லும் வீரத்தமிழ் மன்னர்கள் வீரமாகாளியை வழிபட்டுச் சென்ற வரலாற்றை நாம் அறிவதில் இருந்து வண்ணை வீரமாகாளி அம்மனின் அற்புதமும், ஆலயத்தின் தொன்மையும் தெளிவாகிறது.

அதி சக்திவாய்ந்த அன்னை. வீரமாகாளி இன்று தேரேறி வந்து தமிழர் துயர்துடைக்க இறைஞ்சி ஆசி கூறுகின்றேன்.

சிவஸ்ரீ சின்னச்சாமி செல்வராசா
குருக்கள்.
வீரமாகாளி அம்மன்
ஆலயம்.

### கௌரவ இந்து கலாசார அமைச்சரின் வாழ்த்துச் செய்தி

சைவத்தமிழைப் பேணிப் பாதுகாக்கும் நல்லையம்பதியில் வீற்றிருந்து நம்மைக் காத்தருளும் வீரமாகாளியம்மன் இன்று தேரேறிவருகின்ற திருநாளில் வலம்புரியில் வெளிவரும் சிறப்புமலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மகிழ்வடைகின்றேன். ஈழத்தையாண்ட தமிழ் மன்னர்கள் வெற்றிவாகை சூட தம் வீரவாளை வீரகாளி முன்வைத்து வழிபட்ட வரலாற்றை அறியும் போது எம்முள்ளம் பு,ரிப்படைகிறது. தமிழர்களின் வெற்றித் தெய்வமாக வீற்றிருக்கும் வீரமாகாளித்தாயின் தேர்த்திருவிழா சிறப்புற எனது நல்வாழ்த்துக்களை வழங்கி மகிழ்கிறேன்.

தி.மகேஸ்வரன்
(அமைச்சர்)
இந்துகலாசார அமைச்சு


கல்யாணி கிறீம்ஹவுஸ்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வெங்கடேஸ்வரா
125A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சந்நிதி முருகன்
பட்டறையும் சேவிஸ் நிலையமும்
241, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

விவேகா நகைமாடம்
131, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அலங்கார் நகைமாளிகை
21/7, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே-021 222-2920

அம்பாள் மரக்காலை
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

YOGI
BEAUTY PARLOUR
LADIES BEAUTY & HEALTH CARE CENTRE
Home Science Acadmey
75, Amman Road Nallur
Jaffna.

# நயினை நாகபூ

# இரதோற்சவ

## 12.07.







## திருத்தேர் பவனி அறங்காவலர் சபையின்

## வாழ்த்துச் செய்தி

இன்று (12.07.2003) காலை நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலின் வருடாந்த தேர்த்திருவிழா இடம்பெறுகின்றது. 64 சக்திபீடங்களுள் ஸ்ரீ புவனேஸ்வரி பீடம் என்று அழைக்கப்படுவது நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானமாகும். இந்துப் பண்பாட்டுக்கு எதிராக மிலேச்சாகளால் எவ்விடர் வந்த போதும் அம்பாளின் ஆகமமுறையிலான பூசை வழிபாடுகள் திருப்பணிகள் முட்டின்றி நடந்து வரும் சக்தித் தலம் நயினை நாகம்மாளின் திருக்கோயிலாகும். இயற்கையாகவே, நாற்புறமும் அலையெறியும் கடலால் சூழப்பட்டு மிகவும் பழமை வாய்ந்த வழிபாட்டு மரபுகளைக் கொண்டு இன்றும் சைவத்தமிழ் அடியார்களது உள்ளத்திலே மிகவுயரிய ம்கோன்னத மகிமையுடன் போற்றி வழிபடப்படும் திருத்தலம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவ'லாகும். நயினை நாகபூஷணிஅம்பாள் பல்வேறு திருக்கோலங்களிலேயும், மெய்யடியார்களுக்குத தனது பேரருட் கடாட்சத்தினை நல்கிவருகின்றாள். ஆன்ம கோடிகள் இறைஞ்சும் பெரும் வரங்களையெல் லாம் நல்கி அகிலாண்டேஸ்வரியாக விளங்கி நிற்கிறாள்.

உணர்வதற்கரிய மாபெருந்தெய்வம் ஸ்ரீ நாகபூஷணி அம்மன், அம்பாளின் வரலாற்றுச்சிறப்பு அறிஞர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும, ஞானிகளுக்கும், சித்தர்களுக்கும், யோகிகளுக்கும், ரிஷிகளுக்கும் இன்றைய அனைத்துப் பல்கலைககழகப பட்டதாரி மாணவ மாணவியருக்கும் ஆயுந்தோறும் ஆயுந்தோறும் மலைப்பையும் பெரு வியப்பையும் தந்து நிற்கின்றமையைக் கண்கூடாகவே நாம் கண்டுகொண்டிருக்கிறோம்.

இன்றும் இனி எதிர்காலத்திலும் நயினை ஸ்ரீநாகபூசணி அம்மன் ஆலயத்திலுள்ள மூலமூர்த்தியின் தோற்றம், வடிவம், அதன் தத்துவ விளக்கம் மர்மம் என்பன துலக்கமுறாத வகையிலேயே இருக்கும். சிவாச்சாரியர்களும், ஆய்வாளர்களும், யோகிகளும் மூலமூர்த்தி அம்மனின் திருவுருவத்திற்கு பல்வேறு விளக்கங்களையும் தத்தமது அனுபவத்திற்கும் அறிவுக்கும்ஏற்ப வெளியுலகிற்கு எழுதியும் பேசியும் உர்த்தியும் வருகின்றனர். ஆராய ஆராய மிகவும் கீர்த்திவாய்ந்த தலமாக நயினை ஸ்ரீநாகபூசணி அம்மன் கோயில்திகழும்.

இன்று உலகின் நாலாபுறங்களிலிருந்தும் அம்பாளைத் தரிசித்துத் தமது இஸ்ட சித்திகளைப் பெற்றுக்கொள்ளும் அடியார்கள் வெகு அதிகளவிலான தொகையினராகும். இஃதொனறே அம்பாளின் பேரருளை அளவிடப்போதுமான சான்றாகும். இக் கோவில'னதும் மூலமூர்த்தி எழுந்தருளி மூர்த்திகள்பற்றிய பெருமைகளும் நாகதோஷம் தீர்க்கும் வரலாறும் இவ் ஆலயத்தின் புகழையும் கீர்த்தியையும் மகிமையையும் மகத்துவத்தையும் துலக்க உதவுவனவாகும்.

இத் திருத்தலம் மணிமேகலா தெய்வத்துடனும், கௌதமபுத்தருடனும் தொடர்பு டையதென்பதனை மண'மேகலையூடாகவும் மகாவம்சத்தினூடாகவும் அறியமுடிகிறது. ஆதி வரலாறு சான்றுகளாக இன்றும் காணக்கூடியதாகவுள்ள பாம்புசுறறிக்கல், கருடன்கல் என்பனவும் முதலாம் பராக்கிரமபாகுவின் காலத்துக் கல்வெட்டும் திருத்தேரிலே உள்ள அம்பாள் ஆலய வரலாற்றைச் சித்திரிக்கும் புகழ்வாய்ந்த அழகிய அழகிய சித்திரங்கள் ஆகியனவும் நாகபூஷணி அம்மனின் தனிப்பெரும் கீர்த்தியைத்துலக்க வல்லனவாகும். இயற்கை மூலிகையான வேப்பிலையின் மகத்துவததை நயினைதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலிலே கண்கூடாகவே அனைவரும் அறியலாம். பல்வேறு பிணிகளையும போக்கிச் சுகம் செய்யும் வல்லமையும் ஆற்றலும் ஸ்ரீ நாகபூஷணி எனும் வேப்பிலை நாயகிக்கு உண்டு.

...றும் பெண்களின் உளளத்தில அதியுயர் தெய்வமாகவும், நம்பிக்கைக்குரிய தாயாகவும் ...றாள் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள். திருமணம், மகப்பேறு, உடற்சோர்வு, ...ல் நோய்கள், தோல்நோய்கள் என்பனவற்றினை நீக்கும் பேராற்றல நயினை ஸ்ரீ நாகபூஷணி அ...ளின் ஆலயத்திற்கு உண்டு. நவராத்திரி, ஆடிப்பூரம், திருவெம்பாவை எனும் சமய வி...த நாட்களிலே அமபிகையை உபாஷிக்கும் அடியார்தொகை இன்று பெருகிக்கொண்டே

வருகிறது. இவற்றுக்கெல்லாம் காரணம் நாகம்மாளின் பெ... எம்மால் எடுத்துரைக்க முடியாத வகையிலே விகசித்து வ...

இன்று அறங்காவலர் சபையினர் அம்பாளுக்கெனப் புதி... 99அடி சப்த தளஇராஜகோபுரத்திருப்பணி தொடங்கப்ப... வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

அலையெறியும் சமுத்திரத்தின் மத்தியிலே அழகுமிளிரு... தோற்றமளிக்கவும் பேரழகை மிகுவிக்கவும் இராஜகோபுரத்... ஒத்துக்கொள்வர் என்பது எமது திடமான நம்பிக்கை. ... திருப்பணி நன்கொடையினையும் அம்பாளின் இராஜகோபு... பரிபூரண ஒத்துழைப்பினை நல்குவீர்களென எதிர்பார்... அறங்காவலர் சபையின் முயற்சிகள் இவையனைத்து... இப்புண்ணியத்தில் இன்றுமுதலே நீங்களும் இணையலாம், உ... உதவப்பண்ணலாம், பிரசாரஞ் செய்யலாம், சக்தியை வி...

அனைத்து உயிர்களையும் காப்பாற்றும் கருணை உ... இலங்கையிலே வசிக்கும் பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள், ... பிரிவுகளையும் சேர்ந்தவர்கள் எவ்வித வேறுபாடுகளும்... அன்னதானத்தில் பங்கு கொண்டு வரங்கள் பல பெற்று ... எல்லாச் சமயங்கடுக்கும் சமயவாதிகளுக்கும் இடம் ... எனும் ஆணி வேரின் பலத்துடனும், ஆகம வழிபாட்டு ... நாகபூஷணி அம்மையின் திருத்தேர்த் திருவிழா வை... சிறப்புவாய்ந்ததொன்றாகும்.

இன்றைய அம்பிகையின்திருத்தேர்ப் பவனியிலின்று... மனமொற்றிப் பிரார்த்திக்கத் தக்கது என்னவென்றா... நிரந்தரமான சமாதான சகவாழ்வும் சாந்தியும் ஒற்றுமைய... என்பதுடன் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களது நி... அம்பாள் திருவருள் சுரந்து வழிசமைக்க வேண்டு... சினங்கொண்டு தீங்கிழைக்கும் தீயர் சீலமுற்று நித்... அமைதியையும் திருவருள் சுரந்து நல்கிடம்மா என்று பி...

## அகிலாண்ட கோ...

'அகிலாண்டகோடி ஈன்ற அன்னையே பிள்ளையுங்கன்னி... 84 நூறாயிரம் யோனி பேதங்களிலும் கருவாகி உயிராகி ப...

அறுபத்திநான்கு சக்தி பீடங்களில் ஸ்ரீகாமயோகினி... எண்ணாயிரம்கோடி அவர்தம் தலைவர்கள் முப்பத்து முக்கோ...

நாகத்தீவு, நாவலந்தீவு, நயினாதீவு எனப் பலபெய... காணாத சிறப்புடையதாக விளங்குகின்றது இத்தலம்.

அடியார்கள் ஒரு அடிமுன்னோக்கினால் அன்னை நூ... இன்று இங்கு இடம்பெறும் தேர்த்திருவிழாவில் திரண்...

*ஸ்ரீநாகபூசணி அம்மன் கோவில்,*
*நயினாதீவு.*

# ...பூஷணி அம்மன்

# ... சிறப்பு மலர்

# ...7.2003







பெருங்கருணையேயாகும். அருளாட்சியின் வீச்சு அதன் மகிமை
விரிந்து பரந்து ஆழ்ந்து அகன்று நிற்கிறது.
தியதொரு இராஜகோபுரத் திருப்பணியினைத் தொடங்கியுள்ளனர்.
ட்டுள்ளது. இதனை அடியார்கள்அனைவரும் மனத்திலிருத்த

ரும் ஒரு சக்திபீடம் மேலும், ஓங்கி ஒலிக்கவும் உயர்வீகத்
த்திருப்பணியானது மிகவும் அவசியம் என்பதனை அனைவருமே
க. புண்ணியப்பெரும் பங்களிப்பையும் - பெருந்நிதியினையும்
புரத் திருப்பணிக்கு நல்கி இத்திருப்பணி இனிதே நிறைவுறப்
ர்க்கிறோம். அம்பாளின் அருட்டுணர்வு அடியார்களின் துடிப்பு,
தும் இணைகின்ற செயற்பாடே இராஜகோபுரத்திருப்பணி.
உதவலாம், நண்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரையும்
வியக்கலாம்.
ள்ளம் படைத்த தெய்வம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்.
, இஸ்லாமியர்கள், இந்துக்கள் இன்றும் எத்தனையோ சமயப்
ம் பேதங்களுமின்றி இங்கு வந்து அம்பாளைத் தரிசித்து,
செல்கின்றனர். 'சர்வமத சந்நிதி' எனத் திகழ்வது நயினைதீவு.
தந்து பெருந்தத்துவமாய் வியாபித்துள்ள சைவசித்தாந்தம்
மரபினையும், சைவ நீதியினையும் நிலை நிறுத்தும் நயினை
வபவம் இராஜயோகபோக வைபவமேயாகும். தனிப்பெரும்

நாம் அனைவரும்
ல் இந்த நாட்டிலே
யும் ஏற்பட வேண்டும்
ம்மதியான வாழ்வுக்கு
ம் என்பதேயாகும்.
த்திய சாந்தியையும்
பிரார்த்திப்போமாக!

*அறங்காவலர் சபை,*
*ஸ்ரீ நாக பூஷணி தேவஸ்தானம்,*
*நயினாதீவு.*

## ...டி ஈன்ற அன்னையே

ி என மறைபேசும் ஆனந்த ரூப மயிலே' என்பார் தாயுமான சுவாமிகள்
பரிணமிப்பவள் அன்னை.
ி, ஸ்ரீபுவனேஸ்வரி ஒன்றாக அமைந்தபீடம் அருந்தவர்கள், அமரர்
டி அமரர் கோன் இந்திரன் வேண்டுதலால் அமைந்த பீடம் இதுவேயாம்.
யர்களால் அழைக்கப்படும் உலக யாத்திரைத் தலங்களில் எங்கும்

றுஅடி முன்னோக்கி அருள்புரியும் அற்புதத்தையும் இங்கே காணலாம்.
ர்டுவரும் பக்தர்கலெல்லாம் அன்னையின் அருட்கடாட்சம் கிட்டுவதாக

*தலைவர்*
*திரு. கா.ஆ.தியாகராசா*

## பிரதம குருவின் ஆசிச் செய்தி

அண்ட சராசரங்களையும் ஆண்டு அலைகடல் மத்தியில் வீற்றிருந்து அல்லலுறும் அடியவர்களுக்கு அருள் புரியும் அன்னை நாகபூஷணி அம்பிகையின் பிரமோற்சவம் ஆரம்பமாகி தேர்த்திருவிழா இன்று நடைபெறுகின்றது.

இவ்வாலயத்தில் நடைபெறும் நித்திய, நைமித்திய பூசைகள் ஆகம விதி வழுவாது எதுவிதமான தடங்கலுமின்றி சிறப்பாக நடைபெறுவது அம்பிகையின் பேரருளேயாகும்.

இன்றைய தினத்தில் அன்னையின் பாதக்கமலங்களைப் பற்றி நிற்கும் அடியவர்களது குறைகளை நீக்கி காலங்காலமாக அனுபவித்து வரும் துன்பங்களையும் துயரங்களையும் களைந்து அடியவர்களை இரட்சித்து அருள வேண்டும் என்று வேண்டியருள்கின்றேன்.

*பிரதமகுரு சிவஸ்ரீ வை.மு.பரமசாமிக் குருக்கள்*
*நயினை நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்.*

மலரமைப்பு:
நயினை நாகபூசணி அம்மன்
தேவஸ்தானம்

## மணித்தீவின் நாயகி மக்கள் துயர் துடைப்பாள்

யாழ். குடாநாட்டினைச் சூழவுள்ள தீவுகளில் வரலாற்றுச்சிறப்பு மிக்கது நயினாதீவு. இந்திரனாலே ஸ்தாபிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்ற 64 சக்திபீடங்களில், மணித்தீவின் புவனேஸ்வரி பீடம் நயினாதீவில் அமைந்திருக்கும் நாகபூஷணி அம்மன் ஆலயம் என நம்பப்படுகின்றது.

அடியவர்களின் வாய்களிலும் மனங்களிலும் நின்று அகலாத மாட்சிமை பொருந்திய நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையைத் தரிசிக்கவெனத் தினமும் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் ஆலயக்கடல்தாண்டி அம்பிகையின் அருட்கடாட்சம் பெறத் தினமும் வருகின்றனர். பாராளும் அன்னை நாகபூஷணி இன்று தேரேறி வந்து தமிழர் துயர் துடைக்க வேண்டுகிறேன்.

*செயலாளர்*
*திரு.கு.சரவணபவானந்தன் ஜே. பி.*

## உலகமாதா இன்று தேரேறி வருகிறாள்

அகிலத்திற்கே தாயானவளும் முப்பத்திரண்டு அறங்களையும் செயற்படுத்தி அறம்வளர்த்த நாயகியாகவும் விளங்கும் உலகமாதா, நயினையில் ஸ்ரீநாகபூசணி என்ற நாமத்துடன் எழுந்தருளியுள்ளாள்.

காலம் கடந்த, சிந்தனைக்கு எட்டாத தெய்வீகத் தோற்றத்தில் 'தான் தோன்றியாகி' எழுந்து விளங்கும் இத்தாயின் தேர்த்திருவிழா இன்று நடைபெறுகின்றது.

திருத் தேரேறிவரும் அம்பிகையின் கடைக்கண் பார்வையால் அனைத்து ஜீவராஜிகளும் நலமோடுவாழ வாழ்த்துகிறேன்.

*பொருளாளர்*
*திரு.கனக.ஜீவசீலன்*

*ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்,*
*நயினாதீவு.*

# நயினை நாகபூஷணி அம்மன்
# இரதோற்சவ சிறப்பு மலர்

இன்று ரதபவனிவரும் நயினை நாகபூஷணியின்
அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்

CALTEX
REVTEX



Plus 2T

மிகுந்த பாதுகாப்பும் அதிக வலுவும்

CALTEX
Delo® Gold

டீசல் என்ஜின்களுக்கு அதிக உன்னத பாதுகாப்பு

CALTEX
Havoline Formula

மிகுந்த பாதுகாப்பும் அதிக வலுவும்

ஏகவிநியோகஸ்தர்கள் :- கஜமுகன் ஹாட்வெயர்ஸ்

147,149 ஸ்ரான்லிறோட், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 - 222 2833

214, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 - 222 6147

# இன்று ஒரு தகவல்

## வால்

ஒருவர் நமது வீட்டுக்கு வருகின்றார் என்று வைத்துக் கொள்ளுங்கள். வந்துசொல்கின்றார். ''நான் உங்கள் வீட்டு வாசலில் நுழையும் போதே உங்கள் வீட்டு நாய் என்னைப் பார்த்து வால் ஆட்டியது'' என்றார்

இதற்கு என்ன அர்த்தம்? அவர் நல்ல மனதுடன் இதனை நம்மிடம் தெரிவிக்கின்றார் என அர்த்தம். அவரே ''நான் உங்கள் வீட்டு வாசலில் நுழையும் போதே உங்கள் கடைசிமகன் என்னைப்பார்த்து வாலாட்டினான்'' என்றால் இதற்கு என்ன அர்த்தம்? வயிற்றெரிச்சலுடன் தெரிவிக்கின்றார் என்று அர்த்தம்.

நாய் வாலாட்டுவது ஒரு அர்த்தம். மனித வாலாட்டுவது வேறோர் அர்த்தம். எத்தனையோ பிராணிகளுக்கு வால் உள்ளது. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக உபயோகப் படுத்துகின்றது.

குரங்கிற்கு வால் இருப்பது எதற்காகத் தெரியுமா? அதன் வால அதற்கு ஓர் கை போன்றது. குரங்கு அடிக்கடி தாவிக்கொண்டிருக்கிறதல்லவா? அதுபோல் சமயத்தல எதையாவது கெட்டியாகப் பிடித்துக் கொள்வதற்கும இதன் வால் உபயோகப்படும்.

'பீவர்ஸ்' என்று ஒரு பிராணி. அதன் வால் தட்டையாக இருக்கும். அதுதான் வாலை எதற்கு உபயோகப்படுத்துகின்றது தெரியுமா? அதன் எதிரி யாராவது வருவதைப்பார்த்து விட்டால் தனது வாலை நிலத்தில தட்டி ''எதிரி வருகின்றான் கவனமாக இரு'' என்று தனது தோழர்களுக்கு எச்சரிக்கை செய்யும் அந்தச் சத்தத்தைக் கேட்டு மற்ற 'பீவர்ஸ்' பிராணிகள் உஷாரடைந்து விடும்.

முதலையின் வால் தண்ணீரில் நீந்துவதற்கு உதவியாக இருக்கும்,

அணிலுக்கு வால் இருப்பது எதற்காக? அணில் மிகவும் உயரமான இடத்தில வேகமாகத்தாவி ஓடும் பொழுது விழுந்து விடாமல் இருப்பதற்காக

கங்காரு, வேகமாகத்தாவி ஓடும். அப்படி ஓடும் பொழுது நிலை தவறாது இருப்பதற்குத் தன் வாலைப் பயன்படுத்துகின்றது. அதுமட்டுமல்லாது. தனது பின்னங்காலன் மீது அமர்ந்து கெள்ள வாலை ஸ்டூல் போல பயன்படுத்திக் கொள்ளும் முயலுக்கும் வால் உள்ளது. அதன் வால் எதற்கும் உபயோகப்படாத மாதிரித் தெரியும். ஆனால் முயலின் வால் அதற்கு ஓர் பாதுகாப்புக் கேடயமாகப் பயன்படுகின்றது. ஆமாம் எதிரிகளிடமிருந்து தப்பத்துக் கொள்ள முயல் குடும்பம் வேகமாக ஓடும். அப்படி ஓடும் பொழுது தாய் முயல் வாலை அப்படியும் இப்படியும் அசைக்கும். அந்த அசைவைப் பார்த்துவிட்டு குட்டி முயல்கள் தாம் எத்தத்திசையில் ஓடவேண்டும் என் பதைப் புரிந்து கொள்ளும்.

மயிலுக்கும் வால் உண்டு. அதையே நாம் தோகை என்று கூறுவோம். ஆண்மயில் தோகை விரித்தாடும் அழகே தனி.

அனுமார் கூட இலங்கேஸ்வரனின் முன்னால் தனது தன்மானத்தைக்காட்டத்தனது வாலைப் பயன்படுத்தினார். இருக்கின்ற வாலை எல்லோரும் நல்ல முறையில உபயோகப்படுத்தினார்கள்.

ஆனால் மனிதன் இல்லாத ஒன்றை இருப்தாகக் கற்பனை செய்து கொண்டிருக்கிறான். எல்லா இடத்திலும் வாலாட்டிக் கொண்டிருக்கின்றான். ''என்னிடம் வாலாடடாதே! ஒட்ட நறுக்கி விடுவேன்'' எனும் எச்சரிக்கை வேறு. இதற்கெல்லாம் 'தான்' எனும் அகந்தையே காரணம். இது எங்கு போய் முடியப்போகிறது.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# கால்நடை வைத்தியசாலை

## பணிகள் விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கால் நடை வைத்தியசாலையின் பணிகள் படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன.

யாழ்.கால் நடை வைத்திய சாலை அத்தியட்சகர் வைத்தியகலாநிதி எம்.தங்கராஜா இந் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறர்.

இந்த வகையில், இம்மாதத்திலிருந்து இக் கால்நடை வைத்தியசாலை விடுமுறை நாட்களிலும், ஞாயிற்றுக் கிழமைகளிலும் திறக்கப்பட்டுச் சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றதுடன், பிரதி திங்கட் கிழமைகள் தோறும் கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் உள்ள வைத்தியசேவை நிலையத்தில் கால்நடைவைத்திய சேவைகள் யாழ்ப்பாணம் கால் நடை வைத்தியசாலை வைத்தியரால் நடாத்தப்பட்டு வருகின்றன.

தவிரவும், மாதத்தில் வரும் கடைசி புதன் கிழமைகளில் அரியாலை கலைமகள் சனசமூக நிலையத்தில் நடமாடும் கால்நடை வைத்திய சேவைகள் நடைபெறுகின்றன. (உ-52)

## கொடியேற்றம்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் கல்வளை வீதியில் அமைந்துள்ள காளி அம்பாள் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. (உ-232)

* * * * * *

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு கேணியடி காளி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் வாலயத்தின் தேர், தீர்த்தோற்சவங்கள் முறையே எதிர்வரும் 31ம், 1ம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (உ-8)

## மண்டலாபிஷேகம்

(மானிப்பாய்)

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் அமைந்திருக்கும் ஸ்ரீ இராமநாதேஸ்வரப் பெருமானுக்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெற்று தற்போது மண்டலாபிஷேகம் நடைபெற்று வருகின்றது. (உ-232)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

செல்லக்கதிர்காம ஆலய மஹோற்சவகால ஆன்மீகத் தொடர் சொற்பொழிவில் இன்று சனிக்கிழமை யாழ். கல்வி வலயத்தைச்சேர்ந்த சைவசமய முதன்மை ஆசிரியர் திருமதி பா.பாலசிங்கம் ''இரதோற்சவச் சிறப்பு'' எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளார். (உ-8)

## இராசி பலன்

### 12. 07. 2003

(ஆனி 28, சனி)

சதுர்த்தி பி.ப.01.21 வரை
மூலம் 02.04 வரை
இராகுகாலம் -8.59- 10.29
சுபநேரம் 2.59 - 4.29

**மேடம்**
புதிய தொழில் சிந்தை, வீண்பயம், திடீர்பயனம், காரியதாமதம்

**இடபம்**
எதிர்பாராத பிரச்சினை, உடல்நலக் குறைவு, போசனசுகம், காரியதடங்கல்

**மிதுனம்**
திடீர்பயணம், நண்பர்கள் சந்திப்பு, தெய்வசிந்தை, காரியம் கைகூடம்

**கடகம்**
சுகவாழ்வு, எடுத்தகருமங்கள் கைகூடும், பொருள்சேர்க்கை, திடீர்பயணம்

**சிங்கம்**
கௌரவக்குறைவு, காரிய இடையுறு தொழில்நன்மை, எதிர்பாராதந்மை

**கன்னி**
புதியவிடயம் அறிதல், பயந்த சுபாவம், தாய்வழிஉறவு, மயற்சிதாமதம்

**துலாம்**
கூட்டுமுயற்சி, அந்நியர் சந்திப்பு, சுலரஸ்யம், உறவினர் வருகை

**விருச்சிகம்**
பொருள்விரயம், கடுமையான வார்த்தை, பெரியோரால் வெறுக்கபபடுதல், முயற்சி தாமதம்

**தனுசு**
நல்லமுயற்சி, சயனசுகம். செல்வாக்கு, விருந்துபசாரம்

**மகரம்**
திடீர்பயணம், தந்தைவழிஉறவு, செய்தொழில் முன்னேற்றம், புதியசெலவு

**கும்பம்**
தெய்வதரிசனம், எதிர்பாராத நன்மை, நண் பர்கள் சந்திப்பு, பெருமையடைதல்

**மீனம்**
சுபசெலவு, உற்சாகம், தூரதேசச்செய்தி, பிறருக்கு உதவுதல்

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்

## இன்று தேர்த்திருவிழா



## நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

### ஆச்சிதேரை இருப்பில் சேர்த்து அங்கை கொட்டுங்கள்

- எடுப்பு -
தேரில் வாறாளே அம்பாள் தேரில் வாறாளே
ஊரில் உள்ள மக்கள் எல்லாம் நேரில் வாரீரே!
- தொடுப்பு -
நேரில் வந்து வடத்தைத் தொட்டு நிம்மதி அடையுங்கள்
சீரி னோடு தீபம் கண்டு சிந்தை மகிழுங்கள்
-முடிப்பு -
ஆச்சி தேரை இருப்பில் சேர்த்து அங்கை கொட்டுங்கள்
நாச்சி யாரைப் பச்சை உடுத்து இறக்கி ஆடுங்கள்
நேர்தி யாவும் பக்தியோடு நிறைவு செய்யுங்கள்
தேர்ச்சி வாழ்வில் கீர்த்தி யாகத் தமிழில் பாடுங்கள்

-நயினைக் கவிஞர் - நாகசண்முகநாதபிள்ளை

### லோக நாயகியின் அருள் பெறுவோம்

நாகமது குடையாக நிழல் கொடுக்க
நாற்றிசையும் கடலெழுந்து இசை படிக்க
வேதமுடன் நாதவொலி இணைந்தொலிக்க
வாஞ்சையுடன் அடியவரும் வடம்பிடிக்க
ஆகமத்து விதிமுறையில் அமைந்த தேரில்
அன்னையவள் எழுந்தருளுங் காட்சிகாண
யோகமென் யாம் செய்தோம் இப்பிறப்பில்
லோக நாயகியைப் பணிந்தின்றே அருள்பெறுவோம்

மு.முத்துக்குமார், மானிப்பாய்

### சித்திரத் தேரில் அம்பாள் ஏறுகின்றாள்!.

அலைகடல் தாலாட்ட நயினையில் அமர்ந்து
அகிலத்தை தனதாக்கிக் கொண்டு
அதர்மம் அழிந்து தர்மம் தழைத்திட
அழகுத் தேரில் அம்பாள் ஏறுகின்றாள்
ஏழ்மையும் பிணியும் எங்கும் தொலைந்திட
எழிலுடன் அம்பாள் தேரில் ஏறுகின்றாள்
வாழும் தமிழினம் பூமழை பொழிந்திட
வண்ணத் தேரில் அம்பாள் ஏறுகின்றாள்
சூழ்கலி பூமியில் ஓடி மறைந்திட
சுதந்திரத் தேரில் அம்பாள் ஏறுகின்றாள்!..

- ஆழியூர். சீ.ஏ. யசீகரன்

### நயினையிலே தேரேறி நமக்கொரு தீர்வு தந்திடம்மா!

போரை மண்ணில் நிறுத்திடவே தேரிலேறி வருக
புதிய வாழ்வை தந்திடவே தேரிலேறி வருக
சேரும் பகையை விலத்திடவே தேரிலேறிவருக
செல்வ வாழ்வை செழிக்கவைக்க தேரிலேறிவருக
கோரும் உரிமை கிடைத்திடவே தேரிலேறிவருக
கொள்கை காத்து உழைத்திடவே தேரிலேறிவருக
பாரில் மக்கள் நலனைக்காக்க தேரிலேறி வருக
பஞ்சம் நாட்டில் தீர்ந்து போக தேரிலேறி வருக
நீளும் துயரை நிறுத்திடவே தேரிலேறி வருக
நிரந்தர தீர்வைத் தந்து காக்க தேரிலேறி வருக

- மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன்

### இரதமேறி வரம் தருவாய்

அலைகடல் நடுவுள்ள நாயகி நீயே
கலைபல வளர்த்திடும் நாரணி தாயே
உன்னருள் வேண்டியே உனதடி நாடி
கண்மணி உன்புகழ் பாடிட வந்தோம்
கடல்அலை எழுந்திங்கு ஓம் என்றொலிக்க
கதிரவன் ஒளி உந்தன் கலைவண்ணம் காட்ட
இடர் களைந்திட வென்று அடியவர் கூட்டம்
உடல் அதை வருத்தியே விரதமிருக்க
ரதம் தனில் வந்தே வரம்தனை நல்கும்
பரம்பொருள் நீயே நயினையின் மாதே!

- நயினை ந.மயூரன்

# இஸ்லாமபாத் சார்க் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளச் சம்மதம்

## இரு தரப்புத் தலைவர்கள் சந்திப்பு சந்தேகம்

(காட்மண்டு)

**அடுத்த வருடம் ஜனவரியில் இஸ்லாமபாத்தில் நடைபெறவிருக்கும் சார்க் மாநாட்டில் கலந்துகொள்ள இந்தியா ஒப்புக்கொண்டுள்ள போதிலும் பாகிஸ்தான் தலைவர்களுடன் இந்திய தலைவர்கள் இருதரப்புப் பிரச்சினைகள் பற்றிய பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வார்களா என்பதில் இன்னமும் தெளிவான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.**

காஷ்மீரில் எல்லை மீறிய பயங்கரவாத நடவடிக்க்கைகளை பாகிஸ்தான் கட்டுப்படுத்தாத வரை அந்நாட்டுடன் பேச்சுக்கே இடமில்லை என்று இந்,தியத் தரப்பில்கூறப்பட்டு வருகின்றது.

சார்க் மாநாட்டுக்கு இன்னமும் சில மாதங்கள் இருப்பதால் இரு தரப்புக்குமிடையில் சுமுகமான சூழ்நிலை உருவாவதற்கு வாய்ப்பிருப்பதாக அவதானிகள் கருதுகின்றனர்.

12வது சார்க் உச்சி மாநாடு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 4ஆம திகதி இஸ்லாமபாத்தில் நடைபெறும்.

3 நாட்கள் இடம்பெறவுள்ள இந்த உச்சிமாநாட்டில் பங்கேற்க இந்தியா இணங்கியுள்ளது.

ஜனவரி 4,5,6ஆம் திகதிகளில் இஸ்லாமபாத்தில் இவ் உச்சி மாநாட்டை நடத்துவது என்று நேற்று முன்தினம் நேபாளத் தலைநகர் காட்மண்டுவில் சார்க் நிலைக் குழுக் கூட்டம் முடிவடைந்த பின்னர் இந்திய வெளியுறவுத்துறை செயலர் ஹன்வான்ஷிபால் தெரிவித்தார்.

எனினும் பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பிலுள்ள பகுதிகளிலிருந்து பயங்கரவாதிகள் ஜம்மு-காஷ்மீருக்குள் நுழையாதிருக்க பாகிஸ்தான் அரசு போதிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தி யுள்ளார்.

பயங்கரவாதிகளின் ஊடுருவல்களை நிறுத்தவும், பயங்கரவாதக் கட்டமைப்புக்களை கலைக்கவும் பாகிஸ்தான் நடவடிக்கை எடுக்காதவரை அந்நாட்டுடன் இருதரப்புப் பேச்சுவார்த்தைக்கு வாய்ப்பு இல்லை என்று கூறிவிட்டார்.

இரண்டு ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயியும் பாகிஸ்தானிய தலைவர்களும் நேருக்கு நேர் சந்திக்கும் ஒரு வாய்ப்பினை இஸ்லாமபாத்தில் நடைபெறவிருக்கும் சார்க் உச்சி மாநாடு வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**பாக்-இந்திய பஸ்**

**போக்குவரத்து ஆரம்பம்**

இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்குமிடையிலான பயணிகள் பேருந்து போக்குவரத்துச் சேவை கடந்த 18 மாதங்களுக்குப் பின்னர் நேற்று மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

புதுடில்லி, லாகூர் பேருந்து போக்குவரத்து இருவழிகளிலும் நேற்றுக் காலை தமது பயணத்தை ஆரம்பித்தன.

புதுடில்லியில் அம்பேக்கார் பஸ் நிலையத்திலிருந்து நேற்றுக்காலை 6 மணியளவில் லாகூரை நோக்கிப் புறப்பட்ட பேருந்தில் 26 பத்திரிகையாளர் உட்பட 38 பேர் பயணம் செய்கிறார்கள்.

அதேசமயம் இப்பேருந்துக்குப் பாதுகாப்பாக பொலிஸ் வாகனம் ஒன்றும் செல்கிறது. இதனிடையே லாகூரிலிருந்து புதுடில்லிக்குப் புறப்பட்ட பாகிஸ்தான் பேருந்து நேற்றுக்காலை 8.30 மணியளவில் வாகா எல்லையைக் கடந்துள்ளது. 5 பத்திரிகையாளர்கள் உட்பட 30 பயணிகள் இப்பேருந்தில் உள்ளனர். (பி-2)

WORLD NEWS உலக தரிசனம்

## ஈராக்கில் சதாமின் ஆதரவாளர்கள்

# ஒரே சமயத்தில் 4 நகரங்களில் அமெரிக்கப் படைகள் மீது தாக்குதல்

(பக்தாத்)

ஈராக்கிலுள்ள நான்கு முக்கிய நகரங்களில் நிலை கொண்டுள்ள அமெரிக்கத் துருப்புக்கள் மீது சதாம் ஹுசைனின் ஆதரவாளர்கள் ஒரே நேரத்தில் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இத் தாக்குதல் சம்பவங்களில் அமெரிக்கத் துருப்பினர்கள் எவரும் உயிரிழக்கவில்லை என்றும் இவர்கள் நிலைகொண்டிருந்த காவலரண்களே சேதப்படுத்தப்பட்டுள்ளன என்றும் ரொய்டர் செய்திகள் கூறுகின்றன.

ஈராக்கின் மேற்குப் பகுதி, பலுஜா, ரொமாற்டி, பலாற் ஆகிய நகரங்களில் நிலைகொண்டிருந்த அமெரிக்கத்துருப்பினர் மீது முதலில் மோட்டார் செல் தாக்குதல்களை மேற்கொண்ட சதாமின் ஆதரவாளர்கள் பின்னர் கைக் குண்டுகளையும் இப்பகுதிகளில் வீசித் தாக்குதல்களை மேற்கொண்டுவிட்டுத் தலைமறைவாகி விட்டனர் என்றும் ரொய்டர் செய்திகள் மேலும் கூறுகின்றன.

இதேவேளை, போருக்குப் பின் ஈராக்கில் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் அமெரிக்கர்களை எதிர்த்து சதாமின் ஆதரவாளர்கள் கடந்த மாதம் மட்டும் நடத்திய தாக்குதல்களில் 50ற்கும் மேற்பட்ட அமெரிக்கத் துருப்பினர்கள் கொல்லப்பட்டமை தெரிந்ததே. (பி-2)

# 42 வயது சீன நபரின் மூளையில் புழு!

(ஹொங்காங்)

சீனாவைச் சேர்ந்த 42 வயது நபரின் மூளையில் 9 செ.மீ நீளமுள்ள புழு இருப்பது தெரியவந்துள்ளது.

குவாங்டாங் மாகாணம் லவ்டிங் பகுதியைச் சேர்ந்தவர் அவர். மூளையில் ஏற்பட்ட கோளாறு காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அதற்காக அவருக்கு டாக்டர்கள் சிகிச்சை மேற்கொண்ட பொழுது அவரது மூளையில் புழு நெளிவது தெரியவந்தது.

பாம்பு, தவளை போன்றவற்றைச் சாப்பிடும் பழக்கம் உடையவராம். அந்த நபர் அவ்வாறு சாப்பிடும் போது இந்தப் புழு உள்ளே சென்று மூளையை அடைந்திருக்கலாம் என்று டாக்டர்கள் கருதுகின்றனர். (பி)

# தமிழர் கூட்டமைப்பின் மீது திட்டமிட்ட அவதூறு

## நாடாளுமன்றில் சம்பந்தன் சாட்டை

(கொழும்பு)

அமைதி முயற்சிகளை முன்னேற்றுவதற்கு தமிழர் தேசியக் கூட்டமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பகிரங்கமாக இணைந்து செயற்பட்டு வருகின்றது. தமிழர் தேசியக் கூட்டமைப்பின் விடுதலைப்புலிகளுடனான உறவில் திரைமறைவு செயற்பாடுகள் எதுவும் கிடையாது.

இவ்வாறு திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முக்கியஸ்தருமான ஆர்.சம்பந்தன் நேற்று பாராளுமன்றத்தில் கூறியுள்ளார்.

ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்றை முன்வைத்து சம்பந்தன் சபையில் தொடர்ந்தும் பேசுகையில்,

தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் தங்கியிருக்க இடம் தருவதாகவும், அரசாங்கத்தால் தனிப்பட்ட பாதுகாப்புக்காக வழங்கப்பட்டுள்ள ஆயுதங்களைத் தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் புலிகள் பயிற்சி பெறுவதற்கு வழங்கியிருப்பதாகவும், இந்த சபையிலும் வெளியிலும் அவதூறான கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. அது மட்டுமன்றி பாராளுமன்ற வளவில் அல்லது இங்குவரும் வழியில் பொது சன ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் மீது தமிழர் கூட்டமைப்பு உறுப்பினர்களின் சாரதிகள் அல்லது அலுவலர்கள் தாக்குதல் நடத்த விருப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தமிழர் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மீது பெரும் அவதூறை ஏற்படுத்துபவையாக இருப்பது மட்டுமன்றி அவர்கள் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் என்பதாகவும் காட்டுகின்றன.

எமது உறுப்பினர்கள் அனைவருடனும் ஆலோசனை கலந்ததின் பின்னர் இந்தக் குற்றச்சாட்டுக்களை வன்மையாக ஆட்சேபிப்பதுடன் இவை வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட விஷமத்தனமான குற்றச்சாட்டுக்கள் என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன்.

எமது செயற்பாடுகள் சபைக்குள்ளும் வெளியிலும் கடந்த தேர்தலில் மக்கள் அளித்த அபரிமிதமான ஆதரவின் அடிப்படையிலேயே இருந்து வருகின்றன என்பது வெளிப்படை. அதேபோல் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்னர் அமைதிச் செயற்பாடுகளை முன்னேற்றுவதில் எமது அமைப்பு எப்போதுமே முயன்று வந்துள்ளது. வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினையை அமைதியான நிலையில் தீர்க்கப்படவேண்டும் என்பதே தமிழர் கூட்டமைப்பின் அர்ப்பணித்த உறுதிப்பாடாகும். அமைதி முயற்சிகளை சிதறடிப்பதற்காகவோ அல்லது அரசின் முயற்சிகளை தடுத்து நிறுத்தும் நோக்கத்துடனேயோ இந்தக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கபட்டுள்ளதாக நான் திட்டவட்டமாகக் குறிப்பிட விரும்புகின்றேன்.

தமிழர் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மீது குற்றம்சாட்டக்கூடிய தகவல் எதுவும் இருக்குமானால் அந்த உறுப்பினர் யாரென்பது வெளிப்படுத்தப்படுவதையும் அப்படியானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதையுமே நாம் விரும்புவோம் என்று குறிப்பிட்டார். (பி)

# வழக்கு தீர்ப்பினையடுத்தே அடுத்த கட்ட நடவடிக்கை

## தமிழ் நாடு அரச ஊழியர் சங்கங்கள் தீர்மானம்

(புதுடில்லி)

தமிழக அரசு பிறப்பித்துள்ள அத்தியாவசியப் பணிகள் சட்டத்திற்கு எதிரான வழக்கு விசாரணைகளின் தீர்ப்பு வெளியாகிய பின்னர் அத்தீர்ப்பின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து முடிவெடுக்கப்படுமென தமிழகத்தில் வேலைநிறுத்தப்போராட்டத்தை மேற்கொண்டுள்ள அரச ஊழியர்கள் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில், வதந்திகளைநம்பி வேலைநிறுத்தத்தைக் கைவிடவேண்டாம் என்றும் மற்றும் வேலைநிறுத்தத்தை குழப்பும் வகையில் வதந்திகள் வெளியாகி வருகின்றன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து அரச ஊழியர்களும் தமது ஒற்றுமையுணர்வினை வெளிப்படுத்த வேண்டுமெனவும் அந்த அறிக்கையில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழகம் முழுவதிலும் மூவாயிரத்திற்கும் அதிகமான புதிய அரசஊழியர்களை தமிழக அரசு நியமித்துள்ளதுடன் மேலும் புதிய ஊழியர்களை பணியில் அமர்த்தப்போவதாக அறிவித்துள்ளது. (பி-2)


# கேள்வி அறிவித்தல்

*வீடமைப்பு பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு*

## கட்டிடங்கள் திணைக்களம்

1. **வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியில் வகுப்பறை புளொக் கட்டடம் 1 நிர்மாண வேலைக்கு கட்டடத் திணைக்கள கேள்விச் சபைத் தலைவரால் 2003.07.31 மு.ப. 10.00மணி வரை சீலிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.**
2. **கேள்விப் பத்திரங்கள் 2003.07.25 ஆம் திகதி பி.ப. 3.30 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமான ரூபா ஆயிரம் மட்டும் (ரூபா 1000.00) செலுத்தி கரையோர வீதிக் கட்டடங்கள் திணைக்களம், பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**
3. **கேள்விகள் மூடப்பட்டவுடன் பத்தரமுல்ல செத்சிரிபாய 2வது மாடி, கட்டடத் திணைக்கள, ஒப்பந்தக் கிளை அலுவலகத்தில் உடன் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளித்திருக்கலாம்.**
4. **நிர்மாணப் பயிற்றுவிக்கும் மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தால் அபிவிருத்தி செய்யப்பட்ட நிர்மாண ஒப்பந்தகாரர்களின் தேசிய பதிவு மற்றும் தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் தரம் M6 மற்றும் அதற்கு மேல் நீர் விநியோக வடிகால் அமைப்பு ஒப்பந்தகாரர்களாக பதிவு செய்திருப்பதோடு இலங்கைத் தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர்கள் சங்க அங்கத்தவராயும் இருத்தல் வேண்டும். கேள்விப் படிவங்கள் பெறமுன் ஒப்பந்தகாரர் பதிவுப் புத்தகம் மற்றும் NCCASL அங்கத்துவ அட்டையையும் சமர்ப்பிக்க வேண்டும்.**
5. **பொறியிடப்பட்ட கேள்விகள் நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் தலைவர், கேள்விச்சபை, கட்டடத் திணைக்களம், 'செத்சிரிபாய' ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டே, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு முடிவு நேரத்திற்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.**
6. **தாமதித்துக் கிடைக்கப்பெறும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது எனவும் பாதுகாப்புக் காரணங்களுக்காக கேள்வி மூடப்படுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னர் 'செத்சிரிபாய' வளவுக்குள் வரும்படி கேள்விதாரர் வேண்டப்படுகின்றனர்.**
7. **கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம். மேலதிக விபரங்களை பிரதம பொறியியலாளர், (யாழ்ப்பாணம்) கட்டிடங்கள் திணைக்களம், கரையோர வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.**

ஏ.டி.விக்கிரமசிங்ஹ,
கட்டிடங்கள் பணிப்பாளர்,
கட்டிடங்கள் திணைக்களம்,
'செத்சிரிபாய'
ஸ்ரீஜெயவர்த்தனபுர கோட்டே
பத்தரமுல்ல.

(C/6403)

# நயினை நாகபூஷணி அம்மன் இரதோற்சவ சிறப்பு மலர்

அனைவர் வாழ்விலும் மகிழ்ச்சி பொங்க
இன்று தேரேறும் நயினை நாகபு,ஷணியின்
அருள்நாடி நிற்கின்றோம்



நாளுக்கு நாள் மாறும் நவநாகரிக
தங்கநகைகளைஅசல் 22 கரட்டில்
பெற்றுக்கொள்ள

## பிரசாத் நகையகம்

177GN, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/6184)

---

பாரெல்லாம் போற்றி செய்யப் பவனிவரும்
நயினை நாகபூஷணியே தேரில்
வந்தெம்மை காத்திடம்மா!
தங்கத் தரணியில் தமக்கென
தனியிடம் வகிக்கும்
தங்க நகைகளின் அரங்கம்



## நிருத்திகா ஜுவல்லர்ஸ்

177, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.Phone : 021 222 2694

(C/6183)

---

பார்போற்றும் நயினை நாகபூஷணியின்
தேருலா நாட்டு மக்கள் அனைவருக்கும்
நன்மை அளிப்பதாக அமையட்டும்.
உங்களுக்குத் தேவையான சகல
விதமான புத்தகங்கள் மற்றும் பாடசாலை
அலுவலக உபகரணங்கள் என்பவற்றை
குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள

## ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 222 5542

(C/6182)

---

தொல்லை வினை போக்கும் நயினை ஸ்ரீ
நாகபு,ஷணியின் அருள் அனைவரிற்கும் கிடைக்கட்டும்
INTERNET மூலம் குறைந்த கட்டணத்தில் தொடர்பு கொள்வதற்கும்
இலங்கை முழுவதும் 24 மணி நேரத்தில் துரித தபால்/ பொதிகள் சேவைகளுக்கும்



## SRI MURUGAN TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 222 2670, 021 222 3588
FAX : 222 3214

(C/6181)

---

பார் போற்றும் மணிப்லலவத்தின் நாயகியின் அருள் கிடைக்க வணங்கி நிற்கிறோம்
சகலவிதமான பலசரக்குப் பொருட்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள

## JAFFNA TRADERS

No. 302 HOSPITAL ROAD
JAFFNA.
T.P : 021 222 2509

(C/6185)

---

இன்று ரத பவனி வரும் நயினை நாயகியின் அருள் வேண்டி நிற்கிறோம்.
அதி சிறந்த விமானப் பயணங்களுக்கு

Serendib EXPRESS

## MANOJ EXPRESS SERVICES
## SERENDIB AIR LINE (General Sales Agent)

13, Power House Road
021 222 3916
0777 517019
021 222 2007

(C/ 6180)



# நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ரதோற்சவ சிறப்பு மலர்




பக்தர் நலம் காக்க தேரேறி உலாவரும் மணிபல்லவத்தின் நாயகியே!
உன் அருள் வேண்டி நிற்கின்றோம்!!
தங்க நகையுலகில் தமக்கென தனியிடம் பிடித்தவர்கள்



## புதிய நவீனா நகையகம்

189, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## புதிய வானு நகைப் பூங்கா

177A, கஸ்தூரியார் வீதி, T.Phone : 222 2148 யாழ்ப்பாணம். [C/6174]

அலைகடல் நடுவில் இருந்து அருளாட்சி புரிகின்ற அம்பிகையின் தேர்த்திருவிழா
சிறப்புற வாழ்த்துகின்றோம்.

புத்தம் புதிய அதி நவீன மோட்டார் சைக்கிள்களா? மோட்டார் வாகனங்களா?
அவற்றிற்கான உதிரிப்பாகங்களா? பற்றறி வகைகளா?
அனைத்தையும் நிதான விலையில் ஓரிடமாகப் பெற்றிட



## அருள் விநாயகர் மோட்டோர்ஸ்

108,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## அருள் விநாயகர் ரேடர்ஸ்

106,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [C/6176]

நிலையான சமாதானம் என்றும் நிலைபெற வேண்டி நயினை
ஸ்ரீ நாகபூஷணி அம்மனை வணங்கி நிற்கின்றோம்.
தங்கத் தரணியில் தனியிடம் வகிக்கும் தங்க நகைகளின் அரங்கம்



## சிறீவாணி நகை மாடம்

173, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [C/6175]

அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்
யாவருக்கும் இன்று திருத்தேர் உலா
வரும் நயினை நாகபூஷணியின் அருள்
கிடைக்கட்டும்.
உன்னத கலைநயம் மிக்க எழிலுறு தங்க நகைகளை
உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்திட



## விஷ்ணு ஜுவல்லறி

181, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இன்று ரத பவனி வரும்
நயினை ஸ்ரீ நாகபூஷணியின்
அருள் வேண்டி நிற்கின்றோம்.
எழிலும் உறுதியும் நிறைந்த நவீன ரக
தளபாட வகைகளுக்கு

## திரேசா



## தளபாட மாளிகை

155, 157, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [C/6185]

*நன்மையும் தீமையும் நாடி நலம் புரிந்த தன்மையான் ஆளப்படும்.*

*—குறள்*

வலம்புரி

## பாதுகாப்புஅமைச்சர் இஸ்ரேலுக்கு சென்றது ஏனோ?

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, இஸ்ரேலுக்கு விஜயம் செய்துள்ளார். தன்னுடன் கடற்படைத் தளபதி தயா சந்தகிரியையும் அழைத்துச் சென்றுள்ளார். ஒரு நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் வெளிநாட்டுக்கு பயணம் செய்வதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால் எந்த நாட்டு அமைச்சர் எந்த நாட்டுக்கு விஜயம் செய்கிறார் என்பதைப் பொறுத்தேதான் விளைவுகள் தங்கியுள்ளது.

அவ்வகையில், கடந்த இருபது வருடங்களாக இனயுத்தம் நடந்த ஒரு நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் தனது நாட்டில் இடம் பெற்ற யுத்தத்திற்குப் பல் வேறுவழிகளிலும் உதவி புரிந்து யுத்தத்தை வளர்த்து வந்த நாட்டிற்கு- அதுவும் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கும் போது விஜயம் செய்துள்ளார் எனில் அவ் விஜயத்தின் நோக்கம் என்ன என்பது ஆராயப்பட வேண்டியதொன்றாகும்.

இஸ்ரேலைப் பொறுத்தவரை உலகில் நீதியில்லாத நாடு என்பதற்கு ஒன்றை உதாரணமாகக் காட்டுவதற்காக உலகப் படத்தில் பொறிக்கப்பட்ட தேசமென்றே கற்றறிந்தார் கருத்துக் கூறுவர். உலகில் எங்கெல்லாம் யுத்தம் நடைபெறுகிறதோ-மனிதப் படுகொலைகள் இடம் பெறுகிறதோ அங்கெல்லாம் இஸ்ரேலின் பாவக் கரங்கள் பட்டிருக்கும். இதற்கு மாறில்லாமல் இலங்கை இனயுத்தத்தில் அப்பாவித் தமிழ் மக்களை கொன்றொழிப்பதிலும், விமானத் தாக்குதல் நடத்துவதிலும் இஸ்ரேலின் பங்கு அதிகமாக இருந்தது. சுருங்கக் கூறின் இலங்கை அரசின் கூலிப்படையாக இஸ்ரேல் செயற்பட்டது. தனது யுத்த விமானங்களை வாடகைக்கு வழங்கவும், ஆயுதங்களை விற்பனை செய்யவும் இலங்கையைச் சந்தையாகப் பயன்படுத்திய இஸ்ரேல் தமிழர்களுக்கு எதிராக யுத்தத்தை முன்னெடுப்பதற்கு இலங்கை அரசின் ஆலோசகராகவும் செயற்பட்டது.

இஸ்ரேல் வழங்கிய ஆலோசனைகள் சண்டையை மேலும் வளர்ப்பதாக இருந்ததே ஒழிய, சமாதானத்தை ஏற்படுத்துவதாக இருக்கவில்லை. இதனால் இஸ்ரேல் என்றாலே தமிழ் மக்கள் அந்நாட்டை வெறுப்புடனேயே நோக்குகின்றனர். இந்நிலையில் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும், கடற்படைத் தளபதி தயாசந்தகிரியும் இஸ்ரேலுக்கு விஜயம் செய்துள்ளதன் நோக்கம் என்ன? ஜே.ஆரின் அதேபாணியில் ஐக்கிய தேசிய முன்னணியும் செயற்படுகின்றதா, மீண்டும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யப்போகிறதா? என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

# புலிகள் ஆயுதங்களைக் கைவிடாமல் அரசியலில் பலமடைவது சரியானதா?

## இதையறிய ஜனாதிபதி ஆவல் கொண்டுள்ளாராம் அவரின் ஊடகப் பேச்சாளர் ஹரிம் பீரிஸ் தகவல்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணத்துக்கான இடைக்கால நிர்வாக சபை தொடர்பான திட்ட வரைபை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதற்கு முன்னர், அவற்றை அமைச்சரவையில் சமர்ப்பிக்க வேண்டும் என்பதே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் கருத்தாகும்.

இவவாறு ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரிம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.இது பற்றி ஹரிம் பீரிஸ் மேலும் தெரிவிக்கையில்;

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கடந்த புதன் கிழமை அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார்.

அத்துடன்,நிர்வாக சபை தொடர்பான திட்ட வரைபு பற்றி பாராளுமன்றத்திலும் சனசமூகத்தின் மத்தியிலும் கலந்துரையாடப்பட வேண்டும் என்பது ஜனாதிபதியின் விருப்பமாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிடாமல் அரசியல் பலத்தைக் கைப்பற்றுவது சரியானதா!என்பது பற்றி அறிய ஜனாதிபதி மிகவும் ஆவலுடன் இருக்கின்றார்.

அரசினால் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாக சபை தொடர்பான புதிய திட்ட வரைபு குறித்து ஜனாதிபதிக்கு எதுவும் விளக்கப்படவில்லை.

எனவேதான், இத் திட்ட வரைபு ஆகக் குறைந்தது அமைச்சரவைக்காவது சமர்ப்பிக்கப்படவேண்டும். என்று ஜனாதிபதி அரசைக் கேட்டுள்ளார்.

அத்துடன்,அமைச்சரவையின் அனுமதியின்றி தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இரு அமைச்சர்கள் மாத்திரம் உரையாடுவது திருப்தியற்றது.

இடைக்கால நிர்வாக சபை அமைப்பது போன்ற நடவடிக்கைகள் நாட்டின் பாதுகாப்புக்கும் இறைமைக்கும் அச்சுறுத்தல் ஏற்படும் என்பதால் அது குறித்து அமைச்சரவையில் கலந்தாலோசிக்க வேணடும் என்பதே ஜனாதிபதியின் அபிப்பிராயம் என்று தெரிவித்துள்ளார்.

(உ-10)

## ஜே.வி.பியுடனான கூட்டை எதிர்த்து பொ.ஐ.மு. எம்.பி போர்க் கொடி

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியும் கூட்டுச் சேருவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாதென பொ.ஐ.முன்னணி காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சமிநத தேரர் தெரிவித்துள்ளார்.

காலி மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே சமிந்த தேரர் தனது இந்த எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் பொது ஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியும் கூட்டுச் சேரும பட்சத்தில் பொது ஜன ஐக்கிய முன்னணியில் இருந்து விலகுவதை தவிர வேறு வழியில்லை.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக பெரும் முயற்சிகளை சர்வதேச நாடுகளும் அரசும் மேற் கொண்டு வருகின்றன.

இந் நிலையில் சமாதானம் வேண்டாம்,மீண்டும் போர் தான் வேண்டும் என்று இனவாதம் பேசி வரும் ஜே.வி.பியுடன் கூட்டுச் சேருவது பொது ஜன ஐக்கிய முன்னணியின் அரசியல் எதிர் காலத்திற்கு நல்லதாக அமையாது.

இதனை நான் பலதடவைகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலருக்கும் தெரிவித்துள்ளேன்.

ஆயினும்,அவர்கள் எனது கருத்துக்களைக் கேட்டுப் புரிந்து கொள்ளாது இருக்கின்றார்கள்.

அத்துடன்,பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் ஜே.வி.பி கூட்டடுச் சேருவது தொடர்பாக இரகசியமான முறையில் பேச்சுவார்த்தைகள் நடததி வருகின்றதாகவும் கூறப்படுகின்றது.

இவை பொது ஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுக்குத் தெரியாது என்று தெரிவித்துள்ளார்.

(உ-10)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை அரச சேவை சித்த ஆயுள்வேத வைத்திய அதிகாரிகள் சங்க, புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம் பெற்றது.

சங்கத்தின் தலைவராக வைத்திய கலாநிதி பொன்.சண்முகரட்ணம்,செயலாளர் வைத்திய கலாநிதி கே.சிவராஜா,பொருளாளர் வைத்திய கலாநிதி எஸ்.சிவசுதன் ஆகியோரும் போசகர்களாக வைத்திய கலாநிதிகள் ஆர்.கனகலிங்கம்,வி. வேதநாதன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(இ)

## சிங்கள-தமிழ் மக்கள் ஒருவரோடு ஒருவர் நல்லெண்ணம் கொண்டு வாழ வேண்டும்

### மன்னார் ஆயர் அழைப்பு

(கொழும்புத்துறை)

இலங்கை நாடு சிங்கள பௌத்த நாடல்ல இந்நாடு பல்லின மொழி கலாசாரத்தைக் கொண்ட ஓர் நாடு ஆகவே இங்குள்ள மக்களாகிய நாம் ஒருவர் மீது ஒருவர் நல்லெண்ணம் கொண்டு வாழவேண்டும்.

இவ்வாறு மடுத் திருப்பதியில் அண்மையில் நடைபெற்ற தேசிய கல்தோலிகக் இளைஞர் மாநாட்டில் உரையாற்றிய மன்னார் மறை மாவட்ட ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அருட்பணியாளர் மேரி லஸ்சின் தலைமையில் மூன்று தினங்கள் நடைபெற்ற இம் மாநாட்டில் கொழும்பு, கண்டி,சிலாபம்,அநுராதபுரம்,பதுளை, திருகோணமலை,மட்டக்களப்பு, யாழ்ப்பாணம்,ஆகிய இடங்களைச் சேர்ந்த பெரும் அளவு இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய ஆயர்;

இந்த நாட்டில் தேசிய இனங்கள் இரண்டு உள்ளன.சிங்கள மக்கள் ஒரு கலாசாரத்தையும் தமிழ் மக்கள் வேறு ஒரு கலாசாரத்தையும் கைக் கொண்டு வாழ்கின்றார்கள்.ஆகவே,தமிழ் மக்கள் சிங்கள மக்களைப் போன்று இன்னுமோர் தேசிய இனமாக உள்ளனர்.

தமிழர்கள் சிறுபான்மை இனத்தவர்கள் அல்ல.இந்த நாட்டின் வரலாற்றில் தமக்கென ஓர் அரசை ஏற்படுத்தி வாழ்ந்தவர்கள் ஆகவே, இவ் உண்மையைச் சிந்திக்கும் இளைஞர்கள் இன்று எமது நாட்டுக்குத் தேவை.

இவ்விரு இன மக்களும் தமது தாய் நாட்டில் வாழ்வதில் தடைகள் இருக்கக் கூடாது.இவ் உண்மைகள் நிலைக்கும் போதுதான் முழு உரிமையும் மக்களுக்குக் கிடைக்கும்

நீதியின் அடிப்படையில் தான் உண்மையான சமாதானம் நிலவும். நமது நாட்டை அரசியல் வாதிகளிடம் ஒப்படைத்து விட்டு நாம் தூங்கிக் கொண்டிருக்கின்றோம்.

எம்நாட்டில் போர் வேண்டாம். இழப்புக்கள் வேண்டாம்,உண்மையான சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கு இளைஞர்கள் முன்வர வேண்டும் என்றார். (உ-51)

## வீடியோ படக்[illegible]

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழ[illegible] படிப்புக்கள் அலகு [illegible] திரைப்படக் காட்சித் தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை முப. 10.00மணிக்கு புவியியல் துறைமண்டபத்தில் பிரதப்கிஷன் இயக்கதில் உருவான மஸேசாஹீப் எனும் ஹிந்தித் திரைப்படம் தமிழ் உப தலைப்புக்களுடன் காண்பிக்கப்படவுள்ளது.

திரைப்படக் காட்சியின் இறுதியில் கலந்துரையாடலும் இடம் பெறவுள்ளது. ஆர்வலர்கள் எவரும் வருகை தந்து பயன் பெறமுடியும் என புறநிலைப் படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

(உ)

## தென்மராட்சியில் 320 வீடுகளை அமைப்பதற்கு ஏற்பாடு

(தென்மராட்சி)

யூ.என்.எச்.சி.ஆர் நிறுவனம் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராம சேவையாளர் பிரிவுகளில் மீளக் குடியமர்ந்த 320 குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்கவுள்ளது.

இதன் பிரகாரம் மந்துவில் கிராம சேவையாளர் பிரிவில் 11 வீடுகளும் கைதடிக் கிழக்கில் 19 வீடுகளும் நுணாவில் மேற்கில் 23 வீடுகளும் மட்டுவில் நுணாவிலில் 25 வீடுகளும் மீசாலை வடக்கில் 15 வீடுகளும் கொடிகாமம் மத்தியில் 32 வீடுகளும் கொடிகாமம் தெற்கில் 10 வீடுகளும் உசனில் 13 வீடுகளும் குடமியனில் 29 வீடுகளும் கரம்பைக் குறிச்சியில் 23 வீடுகளும் எழுது மட்டுவாள் வடக்கில் 120 வீடுகளும் நிர்மாணிப்பதற்கான ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகிறது. (உ-77)



### ௐ தினசரி தியானம்

#### எல்லாம் அவன் செயல்

ஒருபக்தர் இறைவனது பெரும் கருணைக்காக நரகத்தில் சித்திரவதைப்பட்டாலும் அது இறைவனது செயல் என்று எண்ணி அத்துயரங்களில் மகிழ்ச்சி காண்கின்றார். அவரது அன்புக்குப் பாத்திரமான இறைவன் பற்றிய சிந்தனையை மனதில் எந்த நிலையிலும் எங்கிருப்பினும் நிலை நிறுத்திக் கொள்வதில் பேரின்பம் கொள்கின்றார். எல்லாம் அவன் செயலே என்னும் உண்மையை பக்தர் தம் வாழ்க்கை அனுபவத்தில் காண்கின்றார்.

சுவாமி சிவானந்தர்



## திடீர் சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும்

### பொலிஸ்மா அதிபர் தகவல்

(கொழும்பு)

கொழும்பு உட்பட அதனைச் சூழவுள்ள அனைத்துப் பிரதேசங்களிலும் திடீர் சோதனை நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் என பொலிஸ்மா அதிபர் ரி.இ.ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே நடாத்தப்பட்டு வரும் இந்தச் சோதனை நடவடிக்கைகள் மூலம் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் பெருநதொகையான ஆயுதங்களும், கைப்பற்றப்பட்டுள்ளமையினால் இச்சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமே பாதாள உலக கோஷ்டியினரையும்,பாரிய குற்றங்களைப் புரிந்தவர்களையும் இலகுவில் கண்டறிந்து கைதுசெய்துவிட முடியும் என்று பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-10)

# ஏழு வயது சிறுமி மீது பாலியல் இம்சை

(யாழ்ப்பாணம்)

ஏழு வயதுச் சிறுமியை பாலியல் இம்சைக்கு உள்ளாக்கிய இளைஞனை கலாசாரத்தைப் பேணும் குழுவினர் தடுத்து வைத்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியில் வசிக்கும் மேற்படி சிறுமியை பிரஸ்தாப இளைஞன் பாலியல் இம்சைக்கு உள்ளாக்கினாரென்று தெரியவருகிறது.

வீட்டில் தனிமையிலிருந்த சிறுமியை, அங்கு வேலை செய்யச் சென்ற பிரஸ்தாப இளைஞன் பாலியல் இம்சைக்கு உள்ளாக்கியுள்ளார்.

பாதிப்படைந்த சிறுமி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (இ)

## சில்வாவின் இடத்திற்கு பேராசிரியர் கொல்வின்

(கொழும்பு)

அரசியல் அமைப்புச் சபையின் உறுப்பினராக பேராசியர் கொல்வின் குணரத்தினவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நியமித்துள்ளார். ஜனாதிபதியின் இந்த நியமனம் உடனடியாகவே அமுலுக்கு வருவதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

அரசியல் அமைப்பு சபையின் உறுப்பினராக் இருந்து வந்த ஜனாதிபதி சட்டத்தரணி எச்.எல்.டி.சில்வா இராஜினாமாச் செய்ததை அடுத்தே அந்த இடத்துக்கு பேராசிரியர் கொல்வின் குணரத்தினா நியமிக்கப்ப்ட்டுள்ளார். (வி)

**ஆட்சி..**

யுத்தத்திற்கு முடிவு கண்டு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தி பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டி எழுப்பலாம் என்பதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பூரண நம்பிக்கை கொண்டுள்ளார்.

இந்த நம்பிக்கையின் அடிப்டையிலேயே அவர் விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்து பல் வேறு சிரமங்களுக்கும் மத்தியில் சமாதான முயற்சியை மேற்கொணடு வருகிறார் என்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார். (ம)

## இராஜகோபுரம்

(வேலணை)

வேலணை கிழக்கு பெருங்குளம் ஸ்ரீ முத்து மாரி அம்மன் ஆலயத்திற்கான இராஜகோபுர அமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுத் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. (உ-47)

## கணனி வகுப்பு ஆரம்பம்

(சில்லாலை)

சில்லாலை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் நடாத்தப்பட்டு வருகின்ற இலவச கணனிப் பயிற்சியின் புதிய பிரிவு வகுப்புகள் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. (உ-58)

**சீநோர்..**

அதனை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியும்.

எந்தஅமைச்சின் கீழ் சீநோர் நிறுவனத்தைக் கொண்டு வந்தாலும் நமக்கு அது குறித்து அபிப்பிராய பேதம் இல்லை என்றும் தவரெட்ணம் மேலும் கூறினார். (இ-5)

**பாதுகாப்பு..**

அமைச்சர்கள் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சருடன் பேச்சுக்கள் நடத்துவதுடன் ஆயுத வகைகளையும் பார்வையிட்டபின் ஜுலை 19ம் திகதியே நாடு திரும்பவுள்ளனர்.

இதற்கு முன்னர் கடற்படை அதிகரிகள் குழு ஒன்று அமெரிக்கா சென்றிருந்ததாயினும்.கொள்வனவுகள் எதுவும் செய்யப்படவில்லை.(ந)

# புலிகளின் ஆதரவாளர் புதுநகரில் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரை அண்டியுள்ள புதுநகரில் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர் எனக் கருதப்படும் வாலிபரொருவர் இனம் தெரியாத நபரினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

வேலுப்பிள்ளை (வயது-23)என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவர். இவர் தனது சொந்த அலுவல்களின் நிமிர்த்தம் மட்டக்களப்பு நகருக்குச் சென்று விட்டு சைக்கிளில் வீடு திரும்பும் போது வழி மறித்து சுட்டுக் கொல்லபட்டதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட வாலிபர் துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் அந்த இடத்தில் அநாதரவான நிலையில் கிடந்ததையடுத்து இது பற்றிய தகவலறிந்து:

அவ்விடத்திற்குச் சென்ற பிரஸ்தாப நபரின பெற்றோர் அவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற சமயம் இடை வழியில் மரணமடைந்ததாக மேலும் தெரியவிக்கப்படுகிறது.

இதேவேளை சுட்டுக் கொல்லப்பட்ட பிரஸ்தாப இளைஞருடன் கூடச் சென்ற மற்றைய இளைஞர் துப்பாக்கிச் சூட்டை அடுத்து தப்பி ஓடியுள்ளார். மேற்படி சூட்டுச் சம்பவத்துக்குப் புளொட் அமைப்பைச் சேர்ந்த ரவி என்பவரே காரணமென பொலிஸ் நிலையத்தில் அவர் முறைப்பாடு செய்துள்ளார்.(த-14)

# பிரதமரின் பதவியேற்பு வைபவத்தை படம் பிடிக்கத் தடை போட்டது ஜனாதிபதி சந்திரிகாவே

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பதவிப் பிரமாணம் செய்த வைபவத்தை படம் பிடிப்பதற்காகச் சென்ற செய்தியாளர்களை ஜனாதிபதி மாளிகைக்குள் செல்லவிடாது தடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவே உத்தரவிட்டார்.

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு முன்னாள்பணிப்பாளரும் ஓய்வு பெற்ற பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் கருணாரட்ணா சத்தியக் கடதாசி மூலம் இவ்விடயத்தை உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பதவியேற்ற வைபவத்தை ஒளிப்பதிவு செய்வதற்குத் தடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சீ.என்.ஐ தொலைக் காட்சி நிறுவனத்தால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை வழக்கு விசாரணையின் போது அவர் இதனை சமர்ப்பித்துள்ளார்.

உயர் நீதிமன்றத்தில், தொடர்ந்தும் சாட்சியமளித்த அவர்,இப் பதவியேற்பு நிகழ்வை ஒளிப்பதிவு செய்வதற்கு தடுக்கப்பட்டதற்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

ஜனாதிபதியின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அவரின் உத்தரவுகளுக்கு அமையவே நிறைவேற்றப்படுகின்றன.

இதேவேளை,ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் உயர் அதிகாரி ஒருவரின் உத்தரவுக்கமைய,சீ.என்.ஐ. உட்பட ராவய,சண்டேலீடர் பத்திரிகைகளின் செய்தியாளர்களையும் படப்பிடிப்பாளர்களையும் அம்மாளிகைக்குள் செல்லவிடாது நான் தடுத்தேன் எனவும் சாட்சியமளித்துள்ளார். (தி)

## உள்ளூராட்சி வார விழா

(வேலணை)

வேலணை பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரவிழா எதிர்வரும் 21ம் திகதி வேலணைப் பிரதேச சபையில் கொண்டாட்டப்படவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஸ்ணசாமி கலந்து கொள்வுள்ளார். (உ-47)


## பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்கள கரமான சுபானு வருடம் ஆனி மாதம் 29-ம் நாள் (13.07.2003)
ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரையுள்ள
அனுஷலக்கினமும் சித்த யோகமும் கூடிய சுப முகூர்த்த சுப வேளையில்

**எமது புத்திரி திருவளர் செல்வி**

**கம்ஷனா**

**அவர்களுக்கு**

*இறைவன் திருவருள் துணை கொண்டு நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் பூப்புனித நீராட்டு விழா நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து,வைபவத்தினை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

**இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்**

"கனகா பத்திரிகை விற்பனையகம்"
இல.6.பலாலிவீதி,திருநெல்வேலி.

திருமதி.நவரத்தினம்,
அண்ணன்மார்:வினோதன்(லண்டன்),வசந்தன்
இல.60.பலாலிவீதி,திருநெல்வேலி.

குறிப்பு:தவறுதலாக அழைப்பிதழ் தரப்படாது இருந்தால் தயவு செய்து இந்த அழைப்பை நேர்முக அழைப்பாக ஏற்று வருகைதருமாறு அன்புடன் வேண்டுகிறோம்.



## THE AMERICAN COLLEGE OF HEALTH SCIENCES NURSES' TRAINING FOR FOREIGN EMPLOYMENT

Job Opportunities for both Qualified male and female Nurses in many foreign Countries on completion of Training

With Qualifying Salaries of over US $ 4000 per month or equivalent in USA, Canada & UK

2th Intake August 2003

**We offer you a suitably designed three-year Associate Degree course in Nursing**

- *Approved by the ministry of Health,Nutrition and welfare
- *Affiliated with the PACIFIC UNION COLLEGE Dept. of Nursing in California,USA
- *Classes offered in English medium for Three years of intensive training
- *Assistance to obtain International employment

**Admission Requirements**

- * G.C.E.(O/L) with credit passes in mathematics and English or certificates of successful completion of additional English Language classes
- * G.C.E.(A/L) passes in Biology and Chemistry
- *Pass a Written and oral Examination conducted by ACHS

**INQUIRIES:** The Registrar,
American College of Health Sciences,(ACHS)
254/1,Shodans Building,
Colombo Road,peradeniya.

Please call Rani,TeleFax: 08 385023 Tele: 074 472965
Email:achsky@sltnet.lk

**PLEASE MEET THE OFFICIALS FROM ACHS AT THE SEMINAR TO BE HELD AT JAFFNA Y.M.C.A HALL ON 13th JULY 2003 FROM 10.00AM TO 12.00 NOON AND GET FIRST HAND INFORMATION OF THE COURSES AND OTHER DETAILS.**

(7257)



## இரண்டாம் தவணைப் பயிற்சிப்பரீட்சை

தரம் 1 முதல் 11 வரை

பரீட்சை ① 16/07/03 முதல் 21/07/03 வரை
(தனியார் கல்வி நிறுவனங்களுக்கு மட்டும்)

பரீட்சை ② 28/07/03 முதல் 01/08/03 வரை

விபரங்களைப் பெற்றுக்கொள்ள
சுந்தர் வெளியீடு, 844, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(கோயில் வீதிச்சந்திக்கருகாமை)



## யாழ்.பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தினர் நடாத்தும்

"வாழ்க்கையில் ஆன்மீகத்தின் பங்களிப்பு"

மாதாந்த துறைசார் கருத்தரங்கு

இடம்: நாவலர் மணி மண்டபம்
நாவலர் வீதி,நல்லூர் யாழ்ப்பாணம்.

தலைவர்: திருமதி கோகிலாதேவி மகேந்திரராஜா
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்.வலிகாமம் கல்வி வலயம்)

காலம்: நாளை(13.07.2003)ஞாயிற்றுக்கிழமை
மு.ப.9.30மணி

தொழில்துறை: மருத்துவத்துறை

**சிறப்புச் சொற்பொழிவு வழங்குவோர்**

ஞானபண்டிதர் சேவா சுரபி
வைத்திய கலாநிதி சி.கதிரவேல்பிள்ளை
(மாவட்ட வைத்திய அதிகாரி,ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை(மந்திகை)

Dr.R.சிவசங்கர்
(இரத்த வங்கி-யாழ்போதனா வைத்தியசாலை,போசகர் சாந்தியகம்)

Dr.கலாதேவி சிவயோகநாதன்
(கண்டி போதனா வைத்தியசாலை தியான ஆசிரியை)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையம்.

C/6405)


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.07.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.